# செந்தமிழ்ச் செல்வி

INSTITUTE OF TAMIL ST

## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| கழகம் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புப் பணி | ௫௦௫ |
| உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள் | ௫௧௦ |
| சங்க இலக்கியத்தில் சில அரிய செடிகொடிப் பெயர்கள் | ௫௧௯ |
| தமிழும் மலையாளமும் | ௫௨௫ |
| ஆப்பிரிக்கச் சுற்றுலா | ௫௩௧ |
| இந்தோ - ஐரோப்பிய இனங்கள், மக்களின் தோற்றம் | ௫௩௭ |
| தமிழில் எழுதுவோம் | ௫௩௯ |
| கண்களி மயக்கக் காதலர் | ௫௫௦ |
| நீகிரோ - திராவிடப் பண்பாடுகள் | ௫௫௪ |
| பெங்களூர் தமிழ்ச் சங்கத்தில் கலைஞர் அவர்களுக்கு வரவேற்பு | ௫௫௬ |
| செய்திகளும் குறிப்புகளும் | ௫௫௭ |
| மதிப்புரை | ௫௬௦ |




சிலம்பு-௪௮] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௫, வைகாசி (June '74) [பரல்-௧௦

# 'செந்தமிழ்ச் செல்வி'

## இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. டாக்டர் ந. சஞ்சீவி, எம். ஏ., பி.எச்டி.
தமிழ்த்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.

உ. 'சித்தாந்த கலாநிதி', உரைவேந்தர்,
ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், மதுரை.

ங. திரு. கொண்டல், சு. மகாதேவன் அவர்கள், எம். ஏ., பி. எஸ்ஸி.
இயக்குநர், தமிழகவரசு தமிழ் வளர்ச்சித்துறை.

ச. செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., டிப். லிங்.
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

ரு. செந்தமிழ்க் கலைமணி, வித்துவான்,
பண்டித. கா. பொ. இரத்தினம் அவர்கள்,
பி.ஏ. (ஆனர்சு), (லண்டன்) எம் ஏ., பி.ஓ.எல். (சென்னை)
கொழும்பு.

சு. புலவர் இரா. இளங்குமரன்,
திருநகர், மதுரை-6.

எ. திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.
நூலகர், மறைமலையடிகள் நூல்நிலையம், சென்னை.

---

## கழக வழி வெளிவந்துள்ள
## புலவர் பெருமக்கள் வரலாறுகள்

| | | |
|---|---|---|
| மறைமலையடிகள் வரலாறு | 4 | 00 |
| கவிமணி | 2 | 00 |
| திரு.வி. கலியாணசுந்தரனார் (அச்) | | |
| டாக்டர் சேதுப்பிள்ளை | 5 | 00 |
| ஆல்பர்ட் சுவைட்சர் | 2 | 00 |
| கோபாலகிருஷ்ண கோகலே | 2 | 00 |
| பண்டிதமணி —புலவர் பொ.வே சோ. | 2 | 00 |
| பேராசிரியர் கா. சு. பிள்ளை வரலாறு | 1 | 50 |
| தமிழ் நாட்டு வள்ளல்கள் (2 பகுதிகள்) | 4 | 00 |
| திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் (2 பகுதிகள்) | 22 | 50 |
| அரசஞ் சண்முகனார் | 3 | 00 |
| நாவலர் நால்வர் | 1 | 75 |
| மார்ட்டின் லூதர்கிங் | 2 | 00 |
| மதுரை இருபெரும் புலவர்கள் -புலவர் இரா. இளங்குமரன் (அச்) | ,, | |
| சிங்கத் தமிழர் சிதம்பரனார் | 4 | 00 |
| டாக்டர் சண்முகஞ் செட்டியார் | 1 | 25 |
| நெல்லைத் தமிழ்ப் புலவர்கள் (I & II) தனித்தனி | 1 | 50 |
| விபுலானந்த அடிகள் | 3 | 00 |
| உலகப் பெருங் கவிஞர் இரவீந்திரநாத் தாகுர் | 2 | 00 |

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௪௮ | திருவள்ளுவர் ஆண்டு ௨00௫, வைகாசி சூன் 1974 | பரல் ௧0

# கழகம் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புப் பணி

(முன் பரல் ௪௯௧ ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதுபெரும் புலவர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் தம் ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் வரலாற்றினை இரண்டு பாகங்களாக அச்சிட்டு வெளியிட்டதோடு தம் வரலாற்றினை 'என் சரித்திரம்' என்ற தலைப்பில் 1940 சனவரியில் தொடங்கி 1942 மே திங்கள் வரை ஆனந்த விகடனில் தம் மாணவர் புலவர் கி. வா. சகந்நாதன் அவர்களிடம் சொல்லி எழுதச் செய்து வெளியிட்டு வந்தார்கள். அதன்கண் தம் 43ஆம் அகவை (1898 முடிய) வரையிலுமுள்ள வரலாறே காணப்பெறுகின்றது. அதற்குப் பின்னுள்ள தம் வரலாறு எழுதுவதற்குக் குறிப்புக்கள் இருக்கின்றன வென்றும் தம் மாணவரால் அஃதெழுதப்படும் என்றும் டாக்டர் ஐயர் அவர்களே கூறியுள்ளனர். அங்ஙனம் அவர்கள் கூறியாங்கு இதுகாறும் எழுதப் பெறவில்லை. 28-4-1942இல் டாக்டர் ஐயரவர்கள் இறையடி சேர்ந்து 32 ஆண்டுகள் கழிந்தன. திரு கி. வா. சகந்நாதனவர்கட்குத் தம் சொந்த முயற்சிகள் பல்கிப் பெருகியுள்ளன. எனவே இனி டாக்டர் ஐயரவர்களின் பிற்கால வரலாறு எழுதப்பெறும் என்ற நம்பிக்கைக்கு இடமில்லை. அது பேரிழப்பேயாகும்.

சாமுவேல் ஜான்சன் வரலாற்றைப் பாஸ்வெல் எழுதியது போல் தாம் பாஸ்வெல் ஆக அமர்ந்து டாக்டர் ஐயரவர்கள்

வரலாற்றை எழுதுவதற்குரிய பாக்கியம் தமக்குக் கிடைக்க வில்லையே என்று தணிகைமணி இராவ்பகதூர் வ. சு. செங்கல் வராய பிள்ளையவர்கள் தாம் திருநெல்வேலி மாவட்டப் பதிவாள ராகவிருந்தபோது 24-8-1930இல் வருந்தி டாக்டர் ஐயரவர் கட்கு எழுதிய கடிதம் வருமாறு :

*"தங்கள் அன்பார்ந்த கடிதம் கிடைத்தது. சான்சன் என்ற ஒரு பெரியாரின் சரித்திரத்தை அவருடன் எப்பொழுதும் இருந்து எழுதினர் பாஸ்வெல் என்ற ஒருவர். அவ்வாறு தங்களுடன் எப்பொழுதும் இருந்து தங்கள் ஆராய்ச்சிகளைக் கவனித்தும் தாங்கள் அளவளாவுதலைக் கேட்டுக் களித்தும் - தங்கள் வாழ்நாட் சரிதம் எழுதிவரும் பாக்கியம் எனக்குக் கிடைக்க வில்லையே என்று வருந்துகின்றேன்.*

*"மஹாத்மா காந்தியைப்போலத் தாங்களே தங்கள் சரிதத்தை எழுதித் தனி நூலாக வெளியிடின் தமிழுலகம் மிகக் கடமைப்படும். நான் நான்கு மாதங்கட்கு முன்பு 'பெருங்குளம்' போயிருந்தேன். அங்குக் கோயிலுக்குப் போனேன். சுவாமி பெயர் வழுதீசுரர். அவ்வூரினரும் வழுதி நாடார், வழுதி செட்டியார் என்னும் பெயர் பூண்டுள்ளனர். தங்கள் புத்தகத்தல் (சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் பக்கம் 21 வரி 4) பருதீசுவரர் எனக் காணப்படுகிறது."*

*திருநெல்வேலி, 24—8—1930.*

அடியேன்
**வ. சு. செங்கல்வராயன்**

டாக்டர் ஐயரவர்கள் எழுதிய 'என் சரித்திரம்' என்ற நூல் 1950ஆம் ஆண்டில் அவர்கள் திருமகனார் திரு சா. கலியாண சுந்தரமையரவர்களால் படங்களுடன் 1038 பக்கங்களில் வெளி யிடப் பெற்றது. அந்நூலின் இறுதியில் சேர்க்கப் பெற் றிருக்கும் சிறப்புப் பெயர் முதலியவற்றின் அகரவரிசை பெரும் பயன் தருவது. அதன் சுருக்கப் பதிப்பு ஒன்று 523 பக்கங் களில் சாகித்திய அக்காடமியின் உதவி பெற்றுத் திரு கி. வா. சகந்நாதன் அவர்களால் 1958இல் வெளியிடப் பெற்றுள்ளது. முதற் பதிப்பு அப்படியே மீண்டும் வெளியிடப் பெறுதல் வேண்டு மென்பது அறிஞர் பெருமக்களின் விருப்பமாகும்.

டாக்டர் ஐயரவர்கள் தாம் ஒரு பதிப்பாளர் மட்டுமன்றிப் பேராசிரியரும், கவிஞரும், இசைப் புலவரும், நூல் ஆராய்ச்சி யாளருமாவர். ஏட்டுச் சுவடிகள் இருக்குமிடஞ் சென்று வேண்டிப் பெற்று அவற்றிலுள்ள பிழைகளைக் கண்டுபிடித்துத் திருத்தி நூலாக அச்சிட்டுக் கொணர்வது எளிதான காரிய மன்று. அத்தகைய அரிய செயலைச் செய்த டாக்டர் ஐயரவர் கட்கு எத்தகைய சிறப்பினை எப்போது எவர் செய்யினும் அது ஏற்புடைத்தாகும்.

அவர்கள் புலமையும் புகழும் பார்ப்பனரல்லாத மக்களிட மிருந்தே பெரும்பாலும் பெற்றார்கள் எனின் அது மிகை யாகாது. தம் தந்தையாரிடம் இசைமட்டும் பயின்றார். மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் ஐந்து ஆண்டுகளே தமிழ் கற்ற கல்வி அவர்கள் புகழ் இமயம்போல் வளர்வதற்கு வாய்ப்பாயிற்று. திருவாவடுதுறை திருமடத்துத் தலைவர் அருட்பெருந்திரு சுப்பிரமணிய தேசிகரவர்களிடமும் கல்வி கற்று அவர்களால் வாழ்த்தப் பெற்றதோடு பொரு ளுதவியும் பெற்றார். அருட்டிரு தேசிகரவர்கள் ஆணையின்படி மடத்துத் தம்பிரான்கட்குப் பாடம் சொல்லிவைக்கும் பேற்றி னையும் பெற்றார். மகாவித்துவான் பிள்ளை அவர்களிடம் பாடங் கேட்டுக் கும்பகோணம் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக விருந்து ஓய்வுபெற்ற முதுபெருப் புலவர் சி. தியாகராச செட்டி யாரவர்கள் தமது இடத்தில் திரு ஐயரவர்களைத் தமிழ்ப் பண்டிதராக ஆக்கியது மற்றொரு கிடைத்தற்கரிய பேருகும்.

மாவட்ட நடுவர் சேலம் இராமசாமி முதலியாரவர்கள்தாம் முதன்முதல் சீவகசிந்தாமணி உரை ஏட்டினைக் கொடுத்து வெளியிடும்படி தூண்டினர். அதுவே நூற்பதிப்புத்துறையில் டாக்டர் ஐயர் அவர்கட்கு ஒல்காப் பெரும்புகழை ஈட்டியது. மேனாட்டு நூற்பதிப்பாளர்கள் வியக்கும்வண்ணம் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பதிக்கலாயினர். நூற்பதிப்பாளர் கட்கு எடுத்துக் காட்டாக அவர்கள் இலங்குகின்றனர்.

அவர்கள் வரலாற்றுப் பேராசிரியர் என்பதற்கு அவர்கள் எழுதிய தம ஆசிரியர் வரலாறும் தம் வரலாறு மட்டுமல்லாமல் அவர்கள் ஏட்டுச் சுவடியினின்றும் பெயர்த்துப் பதிப்பித்த இலக்கண இலக்கியங்களிலெல்லாம் அவர்கள் எழுதியுள்ள நூல் கிடைத்த வரலாறு, நூல்வரலாறு, நூலாசிரியர் உரை யாசிரியர்கள் வரலாறுகள், நூல் நுதலிய பொருள் முதலிய குறிப்புக்களெல்லாம் வரலாற்றுச் செல்வங்களேயாகும்.

அவர்கள் அச்சிட்டு வெளிப்படுத்திய 'மான்விடுதூது' என்ற சிற்றிலக்கியத்தைப் போற்றிப் படித்த கம்பராமாயணசார ஆசிரியரும் செந்நாப்புலவரும் பெருஞ்செல்வருமாகிய வெள் ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் 14—5—1936 இல் திரு ஐயரவர்கட்கு எழுதிய மகிழ்ச்சிக் கடிதம் வருமாறு:

"கலைமகள் என்ற பத்திரிகையில் தங்களுடைய மான் விடு தூது நூலாராய்ச்சியைப் படித்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன். அது நூல்களை ஆராய்ச்சி செய்வார்க்கு முன்மாதிரியாகப் பின் பற்றுதற்குரிய மேல்வரிச் சட்டமாமென்று கருதினேன்.

"ஐரோப்பாவிற் காணப்படும் அழகிய இயற்கைக் கண்காட்சிகளுட் சிறந்தது 'ஆல்ப்ஸ் மலைக்காட்சி' யென்பார்கள். அக்காட்சியை டிண்டால் பண்டிதர் வருணித்திருக்கும் வருணனையைப் படிப்போர் தாம் அக்காட்சியை நேரிற் கண்டபோது அடைந்த இன்பத்திலும் அதிக இன்பத்தை அடைவதாகச் சொல்லுவதுண்டு. அதுபோல நான் மான்விடு தூது நூலைப் படித்தபோதடைந்த இன்பத்திலும் அதிகமான இன்பத்தை அதனைப் பற்றிய தங்கள் ஆராய்ச்சியைப் படித்தபோது அடைந்தேன்.

வெள்ளக்கால்
14—5—1936

அன்பன்
வெ. ப. சுப்பிரமணியன்.

முதன்முதல் டாக்டர் ஐயர் அவர்கள் எழுதிய வரலாற்று நூல் 'அருள்மிகு திருவிடை மருதூர் திருக்கோயில் வரலாறு' ஆகும். மற்றும் அவர்கள் எழுதிய அடியிற்கண்ட உரைநடை நூல்களெல்லாம் வரலாற்று நூல்களேயாகும். தம் ஆசிரியரிடம் தமிழ் பயின்று கும்பகோணம் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதரா யிருந்து ஓய்வுபெற்ற முதுபெரும் புலவர் சி. தியாகராச செட்டியாரவர்கள் பெருமுயற்சி செய்து தமதிடத்தில் பண்டிதராக அமர்த்தியதற்கு நன்றி தெரிவிக்கும்பொருட்டு அவர்கள் வரலாற்றை எழுதித் தனி நூலாக வெளியிட்டிருப்பதோடு திருவல்லிக்கேணி திரு வட்டீசுரன் பேட்டையிலுள்ள தமது இல்லத்திற்குத் 'தியாகராச விலாசம்' எனப் பெயரிட்டனர்.

மற்றும் அவர்கள் எழுதிய கனம் கிருட்டிணையர், கோபால கிருட்டிண பாரதியார், மகாவைத்தியநாதையர் ஆகிய இசைப் பெரும்புலவர் மூவரின் வரலாறுகளைத் தனித்தனி நூலாக வெளியிட்டுள்ளனர். மேலும் 'நான் கண்டதும் கேட்டதும்', 'புதியதும் பழையதும்', 'நல்லுரைக் கோவை' 4 பாகங்கள், 'நினைவு மஞ்சரி' 2 பாகங்கள் ஆகியவற்றில் தாம் நூல் தேடுவதிலும், நூலாராய்வதிலும், நூல் பதிப்பிடுவதிலும், தம் வாழ்க்கையிலும் கண்ட சுவைமிக்க வரலாற்றுச் செய்திகளை எளிய இனிய நடையில் எழுதியுள்ளனர். அவை பல பதிப்புக்களைப் பெற்றுள்ளன.

டாக்டர் ஐயரவர்கள் தாம் பதித்த இலக்கியங்களில் விரிவாக எழுதியுள்ள 'புத்தசரிதம்', 'பௌத்த தர்மம்', 'பௌத்த சங்கம்', 'மணிமேகலைக் கதைச் சுருக்கம்,' 'உதயணன் கதைச் சுருக்கம்' ஆகியவற்றைத் தனித்தனி நூலாகப் பதித்து வெளியிட்டுள்ளனர் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

1935ஆம் ஆண்டில் சென்னையிலே 'திருவள்ளுவர் திருநாட்கழகம்' நிறுவப்பெற்று அதன் முதலாண்டு விழாவிலே

பல்லாவரம் தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகள் தலைமை தாங்கிச் சிறப்புரையாற்றினார்கள். அடுத்த ஆண்டு டாக்டர் ஐயர் அவர்கள் 'தலைமை தாங்கித்' திருவள்ளுவரும் திருக்குறளும்' என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள். அத்தலைமையுரை தனி நூலாக வெளியிடப்பெற்றுள்ளது. திருவள்ளுவர் திருநாள் கழகத்துக்குத் தமியேன் பொருளாளராக இருந்த போதிலும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக அலுவலகமே திருநாட் கழகத்திற்கும் அலுவலகமாக அமைந்தது. முதலாண்டில் 'திருவள்ளுவர் நினைவு மலர்' என்ற நூல் ஒன்று மிக்க வனப்புடன் வெளியிட்டு 9 அணா அடக்கவிலை வைத்து விற்கப் பெற்றது. உலகப் பொதுமறையாம் திருக்குறளுக்கு அதுகாறும் அத்தகைய மலர் ஒன்றும் வெளிவந்ததில்லை என்று அறிஞர் பெருமக்கள் போற்றிப் புகழ்ந்தனர். அதன் பின்னரே தமிழகத்திலும் தமிழர்வாழ் வெளிநிலங்களிலும் திருக்குறட் கழகங்கள் பல தோன்றலாயின.

ஏடுதேடல், பாதுகாத்தல், ஆராய்தல், ஒப்பு நோக்குதல், நூல் பதித்தற்குரிய குறிப்புக்களைத் தேடித் தொகுத்தல், பதிக்குமுறையிற் பதித்தல், தம் வாழ்க்கையிற் கண்ட கேட்ட குறிப்புக்களை எழுதி வைத்தல், உள்ளக் கிழியிற் பதித்து வைத்தல், காலத்தைப் பொன்னேபோற் கருதுதல் முதலியவற்றைத் தம் இறுதி நாள்வரை கடைப்பிடித்து வந்த டாக்டர் ஐயரவர்களைப் போல் இக்காலப் புலவர்களில் ஒரிருவராவது தோன்ற வேண்டாவா என்பது எனது விருப்பம்.

மதிநுட்பம் நிறைந்த மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தாம் பிறந்த தஞ்சைமாவட்டத்திலே பிறந்து தமிழ்த் தொண்டினால் அம்மாவட்டத்துக்கு ஒல்காப் பெரும்புகழ் ஈட்டித்தந்த டாக்டர் ஐயர் அவர்கட்குத் தகுந்தவொரு நினைவுக்குறி அம்மாவட்டத்திலே அமைக்க வேண்டு மென்பது எனது தாழ்மையான நேர்மையான வேண்டுகோள்.

பல துறைகளில் பெரும் புகழ்பெற்ற அறிஞர்கள் தம் வரலாறு எழுத வேண்டுமென்பதே எனது பெருவிருப்பம். அதற்கேற்ப அண்மையில் மதிப்புக்குரிய சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் 'எனது போராட்டம்' என்ற தலைப்பிலும் கோவை ஐயாமுத்து அவர்கள் எனது (என்) நினைவுகள் என்ற தலைப்பிலும் தம் வரலாறுகளை விரிவாக வெளியிட்டிருப்பது பெருமகிழ்ச்சி யளிக்கின்றது. அவற்றைப் பற்றிய குறிப்பு அடுத்த இதழில் வெளியிடப்பெறும்.

—வ. சு.

# உயிர்மெய் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

## புல்² - பருத்தற் கருத்து வேர்ச்சொல்

பொருந்தற் கருத்தினின்று பருத்தற் கருத்துப் பிறக்கும். பல பொருள்கள் ஒன்று சேர்வதால் பருமை உண்டாகும். "சேரே திரட்சி." (தொல். உரி. 65).

புல்—பல்=பல. பல்காற் பறவை=வண்டு.

"பல்காற் பறவை கிளைசெத் தோர்க்கும்" (பெரும்பாண். 183).

பல்கால்=பலசமையம், அடிக்கடி. "பல்காலுந் தோன்றி" (நாலடி. 27).

பல்—பன்மை=1. ஒன்றிற்கு மேற்பட்ட தொகைப் பருமை. "தானறி பொருள்வயிற் பன்மை கூறல்" (தொல். கிளவி. 23). 2. தொகுதி. 'உயிர்ப்பன்மை" (புறம். 19). 3. ஒரு தன்மைப்பட்டிராமை. "பன்மையே பேசும் படிறன் றன்னை" (தேவா. 674 : 5). 4. குறிப்பின்மை. பன்மையாகவே பேசினான். (உ. வ.) (W).

பல்—பல்லம்=ஒரு பேரெண். (திவா). பல்=மிகுந்த. பல்வலிப்பறவை=சரபம். "பல்வலிப்பறவை பற்றுபு" (பெருங். இலாவாண. 11:54) பல்லம்—பல்லவம்=பலமுறை பாடப்படும் கீர்த்தனையுறுப்பு. (W).

பல்லவம்—பல்லவி=திரும்பத்திரும்பப் பலமுறை பாடப்படும் கீர்த்தனை முதலுறுப்பு. க. பல்லவி.

பல்—பல்லக்கு=சிவிகையினும் பெரிய (தூக்கிச் செல்லும்) ஊர்தி. "தந்தப் பல்லக்குஞ் சிவிகையுந் தாங்கி" (தொண்டை. சத. 87). சிவிகை (சிறுத்தது) X பல்லக்கு. சிவிந்த பழம் என்னும் வழக்கை நோக்குக.

ம. பல்லக்கு க. பல்லக்கி, பிராகிரு. பல்லங்க்க, ச. பர்யங்க்க.

சென்னைப் ப. க. க. த அகரமுதலியில், இச் சொல் சமற் கிருதத்தினின்று பிராகிருத வழியாகத் தமிழுக்கு வந்ததென்று தலைகீழாகக் குறிக்கப்பட்டுள்ளது.

பல்லக்கு—பல்லாக்கு.

பல்—பல்கு. பல்குதல்=1. பலவாதல். "ஞாயிறு பல்கிய மாயமொடு" (பதிற்றுப். 62 : 6). 2. மிகுதல். "பல்கிய விருப்பினன்" (பிரமோத். பஞ்சா. 21).

பல்—பல=1. ஒன்றுக்கு மேற்பட்டவை. "பலவற்றிறுதி யுருபியனிலையும்" (தொல். எழுத். உயிர்மயங். 18). பலகாரம்= பல சுவையுள்ள தின்பண்டம். 2. பழங்களெல்லாவற்றுள்ளும் பெரிய பலா. "பலங்கனி" (திவ். பெரியதி 3 : 1 : 5). வ. பல (phala).

பல—பலவு=பலா. "பலவுந் தெங்கும் வாழைகளும்" (திவ். திருவாய். 5 : 9 : 4).

பல—பலா. "பலாப்பழத் தீயினைப்பாய்" (திருவாச. 6:46).

பல்—பர்—பரு. ஒ. நோ : சில்—(சிர்)—சிறு. பருத்தல்= பெருத்தல். "பருத்த தோளும் முடியும் பொடிபட" (தேவா. 498 : 11).

பரு—பருக்கன்=பரும்படியானது.

பருக்கை=1. பருமணலை. 2. சோற்றவிழ். "பருக்கை யிலாக் கூழுக்குப்போட வுப்பில்லை யென்பார்க்கும்" (தனிப்பா).

பருப்பொருள் = 1. நுண்பொருளல்லாத பரும்படிப் பொருள். "பருப்பொருட்டாகிய பாயிரம் ('இறை. கள. 1, உரை). 2. சுவையற்ற செய்தி. "பதர்ச்சொற் பருப்பொருள் பன்னுபு நீக்கி" (பெருங். இலாவாண. 4 : 51). மேலெழுந்த வாரியான பொருள். "பருப்பொருள் கடிந்து பொருட்டார்ப் படுத்து" (படுத்துப். உரைச்சிறப்).

பருப்பு=1. பருமை. "பருப்புடைப் பவளம்போல" (சீவக. 2273) 2. சிறிதான அரிசியினும் பெரிய பயற்றுள்ளீடு.

அரிசி×பருப்பு. அரி—அரிசி.

தெ., க. பப்பு.

பருமம்=1. பருமை. 2. பதினெண் கோவை அரைப் பட்டிகை. "பருமந் தாங்கிய" (திருமுரு. 146). 3. புடைத் திருக்கும் புட்டம். (யாழ் அக).

பருமம்—பருமன் = 1. பருமை. 2. பருத்த—வன்—வள்—து. (W).

பருமை = 1. பருத்திருக்கை. 2. பரும்படியான தன்மை. 3. முதன்மை. 4. பெருமை.

பருமை—பருமி. ஒ. நோ : ஒருமை — ஒருமி. பருமித்தல் = 1. பருத்தல். 2. பெருமை யடைதல். 3. எக்களிப்புட னிருத்தல். (W)

பரு—பெரு—பெருமை.

பெருத்தல் = 1. பருத்தல். 2. மிகுதல். "கரடியாதி பெருத்த" (விநாயகபு). இனம் பெருத்து விட்டது. (உ. வ.) 3. உயர்வாதல்.

பெருமை = 1. பருமை. 2. மாட்சிமை. "பெருமையுந் தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு." (குறள். 974) 3. மிகுதி, பெரும்பான்மை. 4. வல்லமை. 5. கீர்த்தி. 6. செருக்கு. பதவியுயர்ந்தவுடன் அவனுக்குப் பெருமை வந்து விட்டது. (உ. வ.) 7. எக்களிப்பு. நான் தமிழன் என்று சொல்லிக் கொள்வதிற் பெருமைப் படுகிறேன்.

பெரு—பெருகு. பெருகுதல் = 1. மிகுதல். "பெருகுமத வேழம்" (திவ். இயற். 2 : 75). 2. வளர்தல். "தளிபெருகுந் தண்சினைய" (பரிபா. 8 : 91). 3. வளர்ச்சி யடைதல். "பண்பிலார் கேண்மை பெருகலிற் குன்றலினிது" (குறள். 811) 4. நிறைதல். 5. முதிர்தல். "பெருகு சூலிளம்பிடிக்கு" (கம்பரா. சித்திர. 10). 6. ஆக்கந்தருதல்.

பெருகு—க. பெர்சு.

பெருகு = புளித்துப் பெருகும் தயிர். (பிங்). தெ. பெருகு. பெருகு—பெருக்கு. பெருக்குதல் = 1. மிகுத்தல். 2. விரிவடையச் செய்தல். "வாரி பெருக்கி" (குறள். 512). 3. குப்பை கூட்டுதல். 4. ஓர் எண்ணை மற்றோர் எண்ணாற் குறித்த மடங்கு அதிகப்படுத்துதல். ம. பெருக்குக, தெ. பெருகு (g), க. பெர்சு.

பெருக்கல் = 1. ஆக்கமடையச் செய்தல். "பின்யா னிவனைப் பெருக்கலு முற்றனன்" (பெருங். உஞ்சைக். 37 : 200). 2. குப்பை கூட்டுதல் 3. ஓர் எண்ணை மற்றோர் எண்ணாற் குறித்த மடங்கு அதிகப்படுத்துதல்.

பெருக்கம் = 1. மிகுதி. "உண்மைப் பெருக்கமாந் திறமை" (திருவாச. 42: 7). 2. வளர்ச்சி. 3. ஆக்கம். "பெருக்கம் பெருமித நீர்த்து" (குறள். 431). 4. நீர்ப் பெருக்கமான வெள்ளம். "புதுப்பெருக்கம் போல" (நாலடி. 354). 5. நீடிப்பு. தாலிப் பெருக்கம். (உ. வ.).

பருக்கன் = பெருக்கன் = பரும்படியானது.

பெருக்கன்—பெருக்கான் = பெருச்சாளி (கோவை வழக்கு). பெருத்த எலி—பெருச்சாளி. (மரூஉ). பெரு + சாளி (பெரும் பணப்பை) என்று காளமேகப் புலவர் பகுத்தது பொருந்தாது. பரு—பரிய—பெரிய = 1. பருத்த. எ-டு: பெரிய காய். 2. பருத்தகன்ற. எ-டு: பெரிய வீடு 3. அகன்ற. எ-டு: பெருநிலம். 4. மூத்த. எ-டு: பெரியண்ணன். 5. தலைமை யான. எ-டு: பெரிய ஆசிரியர். 6. உயர்வான. எ-டு: பெரிய திருவடி. 7. சிறப்பான. எ-டு: பெரிய கொடை 8. திருச்சிறப்பான. எ-டு: பெரிய வெள்ளிக் கிழமை. 9. வலிய. எ-டு: பெரிய காற்று. 10. மிகுந்த. எ-டு: பெரிய செல்வம். 11. உயரமான. எ-டு: பெரிய மரம். 12. நீண்டுயர்ந்த. எ-டு: பெரிய மலை.

பருமி—பருமிதம்—பெருமிதம் = 1. மேன்மை. "பெருக்கம் பெருமித நீர்த்து" (குறள். 431). 2. உள்ளக் கிளர்ச்சி, உள்ளக் களிப்பு. (திவா.). 3. மேம்பாட்டுணர்ச்சி. 4.

> *"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்*
> *சொல்லப் பட்ட பெருமித நான்கே."*
>
> (தொல். மெய்ப்பாட். 9)

செருக்கு. "பெருமை பெருமித மின்மை" (குறள். 979).

புல்—புது. ஒ. நோ: மெல்—மெது.

புது—புதல் = 1. செறிந்த தூறு. "புதன் மறைந்து வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று." (குறள். 274). 2. புல்லினம். (திவா.). 3. மருந்துப்பூடு. (திவா.).

புதல்—புதர் = தூறு.

தெ., க. பொதரு.

புது—புதா = 1. பெருநாரை. "புள்ளும் புதாவும்" (சிலப் 10: 117). 2. மரக்கால் நாரை. (சிலப். 10: 117, அரும்.).

புதா—புதை.=1. அம்புக்கட்டு. "புதையம்பிற் பட்டு" (குறள். 597). 2. மரச்செறிவு, செடியடர்த்தி. 3. ஆயிரம் என்னும் தொகை.

புது—பூது—பூதம்=1. பருத்தது, பெரியது. 2. பெரும் பேய். "பூதங் காப்பப் பொலிகளந் தழீஇ" (புறம். 369 : 17). 3. கூந்தற் பனை. (சங். அக.).

நிலம் நீர் முதலிய ஐம்பூதங்களுள் ஒன்றைக் குறிக்கும் பூதம் என்னும் சொல் பூ (வ. bhū) என்னும் முதனிலையி னின்று திரிந்தது. பூத்தல் - தோன்றுதல். இவ் விருவேறு சொற்களையும் ஒன்றாகக் காட்டியதோடு, வடசொல்லாகவுங் குறித்திருப்பது, சென்னைப் ப. க. க. த. அகர முதலித் தொகுப்பாளரின் குறும்புத்தனமானது.

பூதம்—பூதவம்=மிகப் பெரியதாய்ப் படரும் அல்லது பூதம் குடியிருக்கும் ஆலமரம். (திவா.).

பூதம்—பூதன்=1. மகன். (யாழ். அக.). 2. ஒரு பண்டை யியற் பெயர். "பொய்கை பூதன் பேயார்" (அஷ்டப். நூற்றெட். காப்பு). பூதம்—வ. பூத (bhūta). பூதன்—பூதல்—பூதலி. பூதலித்தல்=உடல் பருத்தல்.

புதை—புடை. புடைத்தல்=1. பருத்தல். "பெச்சவே புடைத்த முத்தமார் தனத்தி" (திருப்பு. 1170). 2. வீங்குதல். "உடல் புடைப்ப வடித்து" (திருவாலவா. 34 : 4).

க. பொடெ.

புடை=1. பருத்த பாகம். (W.). 2. பகுதி. "மற்றப் புடையெல்லாம் ஒவ்வாது" (இறை. சுளம் 1, பக். 23). 3. பக்கம். "ஒருபுடை பாம்பு கொளினும்" (நாலடி. 148). 4. சார்பு. 5. இடம். (பிங்.). 6. முறை. "நிர்வகிப்பதும் சிலபுடைகளுண்டு" (ஈடு, 10 : 10 : 11).

புடை—புடைவி—புடவி=1. பருத்த ஞாலம். (திவா.). 2. உலகம். "அதிர்வன புடவிக ளடையவே" (தக்க யாகப். 723).

க. பொடவி, தெ. புடமி, பிரா. புடவீ—வ. ப்ருத்வீ.

புடை—புடைவை=1. சுற்றிக் கட்டும் ஆடை. "வெண் புடைவை மெய்சூழ்ந்து" (பெரியபு. திருநாவுக். 61). 2. மகளிர் சேலை.

புடைவை—புடவை = 1. துணி. (S. I. I. iv, 31). 2. சேலை.

புடை—புடம்—புட்டம் = 1. புடைத்த பின்புறம் (குண்டி). 2. புடைவை. (பிங்.). தெ. புட்டமு.

புட்டம்—வ. ப்ருஷ்ட.

ஒ. நோ: LG. *but* Du. bot. Sw. but—buttock.

புட்டம்—புட்டகம் = புடைவை. புட்டகம் பொருந்துவ புனைகுவோரும். (பரிபா. 12 : 17). புட்டம்—புட்டா = வீங்கின விதை (அண்டம்).

தெ. புட்ட (ḍḍ), க. புட்டெ (ḍḍ).

புட்டா—புட்டை = பெருத்த விதை (அண்டம்). (Elephantoid serotum).

புட்டம் — புட்டி = பருமை. "புட்டிபடத் தசநாடியும் பூரித்து" (திருமந். 574).

புடை — புணை — பணை. பணைத்தல் = 1. பருத்தல். "பணைத்த வெம்முலை" (கம்பரா. எழுச்சி. 33) 2. செழித்தல். (நாலடி. 251).

பணை = 1. பெருமை. "பணையே பிழைத்தல் பெருப்பு மாகும்." (தொல். உரி. 41). 2. பருத்த மூங்கில் "பெரும் பணைத் தோள்" (பு. வெ. 11, ஆண்பாற். 1). 3. பெரிய முரசு. "வியன்பணை யுருமென வதிர்பட்டு" (பதிற்றுப். 39 : 5).

புது—பொது = 1. பலர் கூடிய கூட்டம் மன்று, அம்பலம், மக்கட்டொகுதி. 2. மன்று கூடும் இடம். 3. பலர்க்கும் அல்லது எல்லார்க்கும் உரிய நிலைமை "பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்" (குறள். 528). 4. சிறப் பின்மை. "பொதுக் கொண்ட ......வதுவை" (கலித். 66). 5. இயல்பு அல்லது வழக்கம். "உரை பொதுவே" (கம்பரா. முதற். 172). 6. எல்லார்க்கும் ஒத்த நடுவுநிலை.

ம. பொது, தெ. பொது (பொத்து).

பொது — பொதுள். பொதுளுதல் = 1. நெருங்குதல். "சிகையனல் பொதுளியதால்" (கம்பரா. இந்திரசித். 20.) 2. நிறைதல். "ஞானங் குணங்கல்வி நூல்பொதுளி" (அரி

சமய. பரகால். 7). 3. தழைத்தல். "இருள்படப் பொதுளிய" (திருமுரு. 10).

பொது—பொதும்பு=1. சோலை. "சாந்தளம் பொதும்பில்" (அகம். 18). 2. குறுங்காடு. "முல்லையம் பொதும்பின்" (சீவக. 3042).

பொதும்பு—பொதும்பர்=1. மரச்செறிவு. "பொழிலின் வியன் பொதும்பரின்" (திருக்கோ. 39). 2. இளமரக்கா. "வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்" (பெரும்பாண். 374). 3. சோலை.

பொது—பொதி=1. தொகுதி. பெய்கணைப் பொதிகளாலே வளர்ந்தது பிறந்த கோபம்" (கம்பரா. நாகபா. 114). 2. கொத்து. "அம்பொதித் தோரை" (மலைபடு. 121). 3. உடல். "பொதியே சுமந்துழல்வீர்" (தேவா. 1154: 9). 4. பருமன். ஆள் பொதியாயிருக்கிறான். (உ. வ.). 5. அம்பலம். "மன்றும் பொதியினு மாமயில் சேர் தஞ்சைவாணன்" (தஞ்சைவா. 34). 6. பொதியமலை. "பொதிமா முனிவ" (சிவதரு. பாவ. 23).

பொதி—பொதிகை=பொதியமலை.

பொதி—பொதியம்=பொதியமலை. "பொற்கோட்டியமும் பொதியமும் போன்றே" (புறம். 2).

பொதி+இல்=பொதியில்=1. அம்பலம். "தமனியப் பொதியிலும்" (மணி. 28: 66). 2. பொதியமலை. "ஆஅய் மழைதவழ் பொதியில்" (குறுந். 84).

பொதி—பொதிர். பொதிர்தல்=1. வீங்குதல். "புனைதார் பொர நொந்து பொதிர்ந்தவென்" (சீவக. 1380). 2. மிகுதல்.

பொதிர்த்தல்=பருத்தல். "பொதிர்த்த முலையிடை" (பரிபா. 21: 25).

பொது — பொத்து — பொத்தை = பருமையானது. பொத்தைக்கால்=யானைக்கால். பொத்தை மிளகாய்=தடித்த மிளகாய். பொத்தையன்=தடித்தவன் (யாழ். அக.).

பொத்து—பொத்தி=1. மடல்விரிபா வாழைப்பூ. (யாழ்ப்.). 2. சோளக்கதிர். (W). 3. விதை. (அண்டம்). 4. வரால் மீன். "மத்தியுஞ் சிறு பொத்தியும்" (குருகூர்ப் பள்ளு).

பொத்துப் பொத்தென்ல் = தடித்திருத்தற் குறிப்பு. குழந்தை பொத்துப் பொத்தென்றிருக்கிறது. (உ. வ.).

பொத்து—பொந்து. பொந்து பொந்தெனல் = தடித் திருத்தற் குறிப்பு.

பொந்தன் = தடித்தவன். பொந்தந்தடி = பெருந்தடி (நெல்லை.). பொந்தத்தடி = பெருந்தடி (நாஞ்சில்).

பொந்தான் பொதுக்கெனல் = தடித்தும் சதை தளர்ந்தும் இருத்தற் குறிப்பு.

பொந்தான்—போந்தான் = பெருங் கோழி.

பொந்து — பொந்தி = பருமை. (சங். அக.).

பொந்தி—போந்தி = வீக்கம். (யாழ். அக.). தெ. போத். போந்திக்கால் = யானைக்கால். தெ. போதக்காலு.

பொது—பொதை = செடியடர்த்தி.

பொது—போது—போதா = பெருநாரை. (சிலப். 10: 117, உரை).

பொதி—போதி = மலை. (பிங்.).

புல்—பொல்—பொலி. பொலிதல் = 1. பெருகுதல். (W) 2. மிகுதல். "கழுநீர் கண்ணகன் பொய்கை" (மதுரைக். 171). 3. சிறத்தல். "பொலிந்த வருந்தவத் தோற்கே. (புறம். 1). 4. செழித்தல். "பொலியு மால்வரை" (தேவா. 236 : 8). 5. நீடுவாழ்தல். "வழிவழி சிறந்து பொலிமின்" (தொல். செய். 109).

பொலி — பொலிசை = 1. ஊதியம். "பொன்பெற்ற பொலிசை பெற்றார் பிணையனார்" (சீவக. 2546). 2. வட்டி. "பொலிசைக்குக் கொண்டவூரும்" (S. I. I. ii, 82). ம. பொலிச.

பொலியூட்டு = பொலிசையூட்டு. (S. I. I. iii, 84 : 88).

பொலிசை—பலிசை = 1. ஊதியம். பலிசையாற் பண்டம் பகர்வான். (பு. வெ. 12, வென்றிப். 2). 2. வட்டி ம. பலிச. இப்பொன் பதினெண் கழஞ்சே மூன்று மஞ்சாடி குன்றிக்கும் பலிசையாற் சந்திராதித்தவல் .............. அட்டுவோமானோம். (S. I. I. i, 116).

பொலி—(பொளி) பொழி. — பொழிதல்=(செய்பொருள் குன்றாவினை) 1. திரண்டு பெய்தல். "கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்" (புறம். 203). 2. மிகச் செலுத்துதல். "இளங்கோளரி பொழிந்தான்" (கம்பரா. நிகும்பலை. 118). 3. மிகுதியாய்க் கொடுத்தல். (சூடா). 4. தட்டுத் தடங்கலின்றி விரைந்து பேசுதல்.

செய்பொருள் குன்றியவினை

1. நிறைதல். "பொழிமலர்த் தண்டுண்" (பெருங். உஞ்சைக். 47 : 110) 2, நிறைந்தொழுகுதல் "புரப்போன் பாத்திரம் பொழிந்தூண் சுரந்து" (மணி. 14 : 49).

பொழித்தல்=திரட்டுதல்.

பொழிப்பு=திரட்டு. பொழிப்புரை=திரட்டுரை.

பொல் — பொல்கு — பொலுகு. பொலுகுதல்=அதிகப்படுதல். தெ. பொலசு (Z).

பொழி—பொழில்=1. பெருமை. (பிங்). 2. சோலை, (பிங்). "காவதப் பொழிற் கப்புறம்" (கம்பரா. வனம் பு கு. 52). 3. பூந்தோட்டம் (திவா). "அணிமலர்ப் பூம்பொழிலகவயின்" (மணி. பதி. 38). 4. ஞாலம். "பொழில் காவலன்" (பு. வெ. 6 : 6). 5. உலகம். "நல்கித்தான் காத்தளிக்கும் பொழிலேழும்" (திவ். திருவாய். 1 : 4 : 5). 6. நாடு. (சூடா). 7. நாட்டின் கூறு. "நாவலந்தண் பொழில்" (பெரும்பாண். 465).

குறிப்பு :—

1. பருத்தல் என்பது ஒன்றற்கும் பலவின் கூட்டத்திற்கும் பொதுவாம்.

2. பருத்தல், மிகுதல், தொகுதல், செறிதல், நிறைதல் என்பன ஓரினக் கருத்துக்கள்.

# சங்க இலக்கியத்தில் சில அரிய மரஞ் செடி கொடிப் பெயர்கள்

[பி. எல். சாமி, பி.எஸ்ஸி.,]

சங்க நூல்களில் ஒரிரு பாடல்களில் மிக அரிதாகச் சில செடி, கொடி, மரங்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ள செய்திகள் மிகக் குறைவு. இவற்றைக் கொண்டு செடி நூற்படி இந்தச் செடிகள் எவையென உறுதியுடன் கூறுவது எளிதன்று. ஆயினும் செடி நூலறிவோடு ஆராயுங்கால் தெளிவு பெற முடிகின்றது. தமிழில் தற்பொழுது வழங்காத சங்க காலப் பெயர்கள் பிற திராவிட மொழிகளில் வழங்குவதைக் கொண்டும் ஆராய்ந்து அறிய முடிகின்றது.

(1) வளகு: வளகு என்றொரு செடியைப் பற்றிச் சங்க நூல்களில் கலித்தொகை ஒன்றில் மட்டும் ஒரு செய்திக் குறிப்பைக் காண்கிறோம்.

> "புணர்திலை வளகின் குளகமர்ந் துண்ட
> புணர்மருப் பெழில்கொண்ட வரைபுரை செலவின்
> வயங்கெழில் யானைப் பயமலை நாடனை" —கலி. 43.

பிற்காலத்து நூலாகிய தணிகைப்புராணம் சங்க நூற்பாடல்களைப் பின்பற்றிச் சில அரிய இயற்கைச் செய்திகளைக் கூறியுள்ளது.

> "இளகு காழகிற் சந்தனப் பொதும்பரெவ் விடனும்
> வளகு மேய்ந்து சேவகங் கொளு மாமத மொழுக்கும்"
> —தணிகைப் புராணம், திருநாட்டு. 89.

'வளகு' என்ற பெயர் தமிழில் இன்று பேச்சு வழக்கில் பயில்வதில்லை. ஆயினும் மலையாளத்திலும் கன்னடத்திலும் கலித்தொகையில் வழங்கும் பெயர் இன்றும் காணப்படுவதிலிருந்து வளகு என்ற செடி எதுவென்று அறியமுடிகின்றது. வளகு என்பது மலையாளத்தில் 'வெளுகு' என்று வழங்குகின்றது. கன்னடமொழியில் 'பெலகு, பெலகடா' என்று இச் செடி அழைக்கப்படுகின்றது. சூளாமணியில் 'விதிவழகுடை விரியிலையிடை' (137) என்று வரும் வரியில் வழகுஇலை செறிந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. 'வழகு உடை' என்பதற்கு வழுவழுப்புடைய என்று பொருள் கூறுவதைவிட வழகு என்ற மரமென்று

கொள்வதே சிறந்தது. இது காடுகளில் காணப்படும் சிறுமரம் ஆகும். குன்றுகளில் நன்ருக வளரும். அடர்த்தியாகக் கிளை விட்டு வளரும். இதன் இலையை உணவாக விரும்பி யானை உண்டதாகக் கலித்தொகை கூறியுள்ளது. தணிகைப்புராணமும் யானைகள் வளகை மேய்ந்தன என்று கூறியுள்ளது. கலித் தொகையில் கூறப்பட்ட இச் செய்தி மிகவும் முக்கியமானது. யானைகளின் பழக்க வழக்கங்களை இயற்கைச் சூழ்நிலையில் ஆராய்ந்த கிருஷ்ணன் என்ற அறிஞர் (M. Krishnan) அதற்கு உணவாகும் மரஞ்செடிகளை நேரில் ஆராய்ந்து கண்டு எழுதி யுள்ளார். தேக்குமரத்தின் இளந்தளிர்களையும் வேறு பிற மரங்களின் இலைகளையும் விரும்பி உண்பதைப் பற்றி எழுதி யுள்ளார். இந்த அறிஞர் கூறியுள்ள செடிகளில் மலையாளத் திலும் கன்னடத்திலும் வெளுகு, பெலகு என்றழைக்கப்படும் செடியும் (Kydia Calycina) என்பதும் ஒன்ருகும். இன்று இயற்கை ஆராய்ச்சியாளர் (naturalists) கண்டுபிடித்து எழுதிய இந்தச் செய்தியை அன்றே கலித்தொகை கூறியிருப்பது வியப்பைத் தரும். காட்டில் வாழும் மக்களும் பாமர மக்களும் யானை உண்ணும் செடிகளை நன்கு தெரிந்து வைத்திருக் கின்றனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. யானையின் உணவைக் கவளம் என்று அழைப்பது மரபு. யானை விரும்பி உண்ணும் மரங்களையும் செடிகளையும் கவளம் என்ற பெயராலேயே நாட்டு மக்கள் பேச்சு மொழியில் அழைப்பதைக் காணலாம். அவர்கள் கவளம் என்று அழைக்கும் அதே செடி களையே யானைகள் விரும்பி உண்பதை அறிஞர் கிருஷ்ணன் கூறியுள்ளது மேலும் வியப்பைத் தரும். தமிழில் வட்டபுரி (Helicteres Ixera) என்று இன்று அழைக்கப்படும் மரம் கவளம் என்று நாட்டு மக்கள் பேச்சில் அழைக்கப்படுகின்றது. கன்னடத்தில் இதையே கவணை, கவரிகை என்றழைக் கின்றனர். இந்த மரத்தின் இலையை யானை விரும்பி உண்ணும் என்று இதே அறிஞர் கூறியுள்ளார். கன்னடத்தில் கவ்வல், கவளி என்று (Cariya Arborea) என்ற மரத்தை அழைக்கின் றனர். கவளம், கவணை, கவரிகை என்ற சொற்கள் எல்லாம் யானை தன்வாயகத்தில் இடும் இலை உணவைக் குறித்து வழங்கு வதைக் காணலாம். கவவு அகத்திடுதல் என்று தொல்காப்பியம் கூறிய உரிச்சொல்லின் பொருள் இச் சொற்களிலும் காணப் படுவது தெரிகின்றது. இதுவும் யானையின் விருப்பமான உணவு என்று அறிஞர் கிருஷ்ணன் கூறியுள்ளார். இந்த அறிஞர் இயற்கையில் காடுகளில் விலங்குகளின் பழக்க வழக்கங் களை ஆராய்வதற்காக நடுவண் அரசின் நேருப் பரிசு (Nehru award) பெற்றவர். அவர் கூறியுள்ள பல இயற்கைச் செய்தி

களைச் சங்க நூல்களில் காணும்போது நாம் வியப்படையாமல் இருக்க முடியாது. யானையின் உணவெனக் கண்டுபிடித்து இந்த அறிஞர் சொல்லியுள்ள பல மரஞ்செடிகளைச் சங்க நூல்களும் கூறியுள்ளன என்பதைக் காணும்போது சங்க நூற்புலவர்களின் நுண்ணிய அறிவுத்திறத்தை மிகவும் போற்றலாம்.

(2) வெள்ளோத்திரம்: சங்க நூல்களில் ஐங்குறு நூற்றில் மட்டும் ஒரு பாட்டில் வெள்ளோத்திரம் என்ற மரப்பெயர் காணப்படுகின்றது.

*"மால்வெள் ளோத்திரத்து மையில் வாலிணர்*
*அருஞ்சுரஞ் செல்வோர் சென்னிக் கூட்டும்"*

—ஐங்குறுநூறு 301

வெள்ளோத்திரம் என்ற மரத்தைச் சீவகசிந்தாமணியும் பிற்கால நூல்களும் வெள்ளிலோத்திரம் என்று அழைக்கின்றன.

*"வாசநெய் வண்டு ஞூச மாந்தளிர் விரல்கள் சேப்பப்*
*பூசிவெள் ளிலோத்தி ரத்தின் பூம்பொருக் கரைத்த சாந்தின்*
*காசறு குவளைக் காம ரகவிதழ் பயில மட்டித்*
*தாசறத் திமிர்ந்து மாத ரணிநலந் திகழ்வித் தாரே"*

—சிந்தாமணி. 622.

*"வெள்ளி லோத்திரம் விளங்கும் வெண்மலர்க்*
*கள்செய் மாலையார் கணகொ ளாத்துகில்*
*அள்ளி யேந்திய வரத்த வல்குலார்*
*ஒள்ளெ ரிம்மணி யுருவப் பூணினார்'* —சிந்தாமணி 2685.

வெள்ளோத்திரத்தின் பூவைத் தலையில் சூடுவதை ஐங்குறுநூறு கூறியுள்ளது. இதன் மலர் வெண்மையானது, மணமுடையது என்று கூறியுள்ளதைக் காணலாம். சிந்தாமணி வெள்ளோத்திரத்தை வெள்ளிலோத்திரம் என்று அழைக்கின்றது. வெள்ளிலோத்திரத்துக்கு வெண்மலர்கள் உண்டென்றும் அதன் மலர்களை மாலையாகத் தொடுத்து அணிவர் என்றும் கூறியுள்ளது. மற்றும் உலர்ந்த வெள்ளிலோத்திரத்தின் பூவை அரைத்த சாந்தை மாதர் மேலே பூசிமகிழ்வர் என்றும் கூறியுள்ளது. சூளாமணியும் வெள்ளிலோத்திரப் பொதும்பரில் நுழைந்த மாருதம் மணப்பெருக்கை யடைந்ததாகக் கூறும். வெள்ளிலோத்திரத்தின்பூ நறுமணமுடையது, குளிர்ச்சியானது. அதனால் இதன் உலர்ந்த பூவைச் சாந்தாக அரைத்து மாதர் உடலில் பூசினர் என்பது விளங்குகின்றது. 'லோத்ரா' என்ற

வடமொழிப்பெயரே தமிழில் 'லோத்திரம்' என்று பயின்று வந்ததாகத் தெரிகின்றது. இது வெள்ளைப்பூவையுடையதால் வெள்ளோத்திரம் என்று ஐங்குறுநூற்றில் அழைக்கப்பட்டுள்ளது. சிந்தாமணியில் வெள்ளிலோத்திரம் என்றழைக்கப் பட்டது. இந்த மரம் தமிழ்நாட்டில் கொல்லிமலை முதலிய கிழக்குத் தொடர்ச்சி மலைகளிலும் மேற்குத்தொடர்ச்சி மலைகளிலும் காடுகளில் வளருகின்றது. குறுமரம், சிறிய பூக்கள் வெண்மையானவை. கொத்துக் கொத்தாகப் பூக்கும். மணம் மிகுந்தது. சிந்தாமணியில் குறிப்பிட்டுள்ளது போலப் பின்பனிக் காலத்திலும் பூக்கும். இதைத் தற்காலம் கம்பிவெட்டி என்றும் வெள்ளிலோத்தி என்றும் நாட்டு மக்கள் அழைக்கின்றனர். சங்க இலக்கியத்தில் செடி, கொடி, மரப்பெயர்களில் வடமொழிப் பெயர் காணப்படுவது மிக அரிதாகும். வெள்ளோத்திரம் என்ற பெயரே மிகப் பழைய சங்க நூல்களில் காணப்படும் ஒரே வடமொழி மரப்பெயராகும். குறிஞ்சிப்பாட்டிலும் சிந்துவாரம், பலாசம், பிண்டி ஆகிய வடமொழிப் பெயர்களைக் காணலாம். ஆனால் ஐங்குறுநூற்றுப் பாடல்கள் சங்கப்பாடல்களில் மிகப் பழைமையானவையென்றும், குறிஞ்சிப்பாட்டு காலத்தால் சிறிது பிந்தியது என்றும் கருதுவர். குறிஞ்சிப்பாட்டு ஆரிய அரசனுக்குத் தமிழ் அறிவிக்கப் பாடப்பட்டதால் தூய தமிழ்ப் பெயர்கள் இருக்கவும் ஒருசில வடமொழிப் பெயர்களைப் பயன்படுத்தியதாகத் தெரிகின்றது. வெள்ளோத்திரம் என்ற பெயர் மருத்துவப் பழக்கம் காரணமாக வடமொழியிலிருந்து வந்திருக்கலாம். லோத்திரம் சிறந்த மருந்து தரும் மரமாகும். இதிலிருந்து பெண்களுக்குப் பயன்தரும் மருந்து இன்றும் செய்து விற்கப்படுகின்றது. நோய்களைத் தடுக்கும் என்ற பொருளில் லோத்திரம் என்ற சொல் வடமொழியில் வழங்குகின்றது. மலையாளத்தில் இந்த மரத்தைச் 'சிறுமரம்' என்று அழைக்கின்றனர். தமிழில் 'பெருமரம்' என்ற பெயரில் நீண்டு பெரிதாக வளரும் ஒரு தனிமரம் உள்ளது. இந்த மரத்தின் பூ கெட்ட நாற்றம் அடிப்பதாகும். அதற்கு எதிராக நறுமணப் பூவுடைய வெள்ளோத்திரமரத்தைச் சிறுமரம் என்றழைத்தனர் போலும். இந்த வெள்ளோத்திர மரம் சங்க நூல்களில் ஐங்குறுநூற்றில் ஒரே ஒரு பாடலில் மட்டும் கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். செடிநூலார் வெள்ளோத்திரத்தை (Symploces Spicata) என்றழைப்பர். வெள்ளிலோத்திரம் கருவிளமரத்தைக் குறிக்குமென்று சில தமிழ் அகராதிகள் கூறுவது தவறு. வெள்ளில் என்ற பெயர் கருவிளத்தைக் குறிக்கும்.

(3) இலஞ்சி: சங்க நூல்களில் ஐங்குறுநூற்றில் மட்டும் இலஞ்சி' என்ற மரப்பெயர் ஒரே ஒரு பாடலில் வருகின்றது.

> "மள்ள ரன்ன தடங்கோட் டெருமை
> மகளி ரன்ன துணையொடு வதியும்
> நிழன்முதி ரிலஞ்சிப் பழனத் ததுவே" —ஐங்குறுநூறு 94.

இலஞ்சி என்ற சொல் ஐங்குறுநூற்றில் குளம் என்ற பொருளில் வேறுபாட்டில் வருகின்றது. 'நிழல் முதிர்ந்த' என்ற அடைமொழியுடன் வருவதால் இலஞ்சி என்ற சொற்கு குளம் என்ற பொருள் கொள்வதைவிட மரம் என்று பொருள் கொள்வதே பொருத்தமானது. இலஞ்சி என்ற மரம் மகிழ மரமென்று கூறப்பட்டுள்ளது. தமிழ் நூல்களில் இலஞ்சி என்ற சொல் மகிழமரம் என்ற பொருளில் சிலப்பதிகாரத்தில் காணப் படுகின்றது. இந்திரவிழவூரெடுத்த காதையில் 'பழுதில் காட்சி நன்னிறம் பெற்று வலஞ்செயாக் கழியும் இலஞ்சி மன்றமும்' என்று வரும் வரியில் 'இலஞ்சி' என்ற சொல் மரத்தையே குறிக்கின்றது என்று கருதவேண்டும். அரும்பதவுரை ஆசிரியர் இலஞ்சி என்பதற்கு மடு என்று பொருள் கூறினர். அடியார்க்கு நல்லார் இலஞ்சி மகிழென்பாரை மறுத்துக்கூறிப் பொய்கை என்று பொருள் கூறினர். ஆனல் வலஞ் செய்து கழியும் என்று சொல்லியிருப்பதால் அது பொய்கையாக இருக்க முடியாது, மகிழமரமாகத்தான் இருக்குமென்று கருதவேண்டும். புறநானூறும் (34), மணிமேகலையும் 'இரத்தி மன்றம்' என்று இலந்தை மரம் இருந்த மன்றத்தைக் கூறியிருப்பதைக் காணலாம். ஆதலின் இலஞ்சி மன்றமும் இலஞ்சி மரமிருந்த மன்றமாகவே இருக்க வேண்டும். அரும்பதவுரையாசிரியரும் அடியார்க்குநல்லாரும் கூருத பொருளை வேருேர் உரை யாசிரியர் கூறியுள்ளார். சிலப்பதிகாரத்திற்கு வேருேர் உரையும் உண்டு என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. மகிழமரத்தை வலம் வந்தார் என்று சொல்வது பொருத்தமே என்று கூறுவதற்குச் சான்று உண்டு. தேவார காலத்தில் ஆலக்கோயில், ஞாழல்கோயில், கொகுடிக்கோயில் என்பவை இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இவை இலந்தை மன்றம் போன்று மரங்களைச் சுற்றி வலம்வரும் கோயில்களாகத் தோன்றி யிருக்க வேண்டும். இன்றும் மலையாள நாட்டில் மகிழமரத்தின் இலையைப் பழந்தெய்வ வழிபாட்டில் பயன்படுத்துகின்றனர். சிலவகைப் பாலை மரங்கள் மலையாள நாட்டில் பழந்தெய்வ வழிபாட்டில் மிகவும் முக்கியமானவையாகும். மகிழமரத்தின் இலையைத் தெய்வ வழிபாட்டில் பயன்படுத்துகின்றனர். அதன்

இலையை 'எறிஞ்ஞிசெப்பு' என்று அழைக்கின்றனர். இலஞ்சி என்று ஐங்குறுநூறும், சிலப்பதிகாரமும் கூறும் மகிழ மரத்தையே மலையாளத்தில் 'இறைஞ்சி' என்று இன்றும் அழைப்பது கவனிக்கத் தக்கதாகும். இறைஞ்சிப் பாலை, வல்லிய பாலை என்றழைக்கும் மரங்கள் மலையாள நாட்டில் பழந்தெய்வ வழிபாட்டிற்குரிய முக்கியமான மரங்களாகும். எறைஞ்சி என்று மலையாளத்தில் வழங்கும் பெயர் இலஞ்சி என்ற பெயரின் மாற்றமாகும். கேரள நாட்டில் சில இடங்களில் எலஞ்சி, எலங்கி, ரெஞ்சி என்றும் இலஞ்சி மரத்தை அழைக்கின்றனர். கன்னடத்தில் எறஜி (Eraji) என்றழைக்கின்றனர். சிலப்பதிகார ஆசிரியர் சேரநாட்டைச் சார்ந்தவராதலால் சேர நாட்டு வழக்குச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார் என்று கருதவேண்டும். மகிழம் என்ற பெயர் பரிபாடலில்தான் முதலில் வருகின்றது. மகிழ்மாலை, மகிழலகு என்று திவ்யப்பிரபந்தங்களில் இப் பெயர் வருகின்றது. மகிழின் பரலைத் திவாகர நிகண்டு கூறியுள்ளது. ஆனல், மணிமேகலையிலும் குறிஞ்சிப் பாட்டிலும் வகுளம் என்று மகிழமரம் அழைக்கப்பட்டுள்ளது. மகிழம் என்ற பெயரே வகுளம் என்று மாறிப் பின்னர் வடமொழியில் புகுந்ததாகத் தெரிகின்றது. மகிழமரத்தை இன்று மக்கள் மகுடமரம் என்றழைக்கின்றனர்.

(தொடரும்)

---

## நல்லிசைப் புலவர் யார்?

"...உயிர்ப்பொருள் உயிரில் பொருள்களில் தாம் நுண்ணிதாக நுழைந்தாராய்ந்தறிந்த அழகிய கூறுகளைப் பாக்களிலும் உரைகளிலும் சுவைபெருக வமைத்தும், பயில்வார்க்கு அறிவோடு இன்பத்தையும் பயக்க வல்லவர்களே நல்லிசைப் புலவராவரெனவும், பொருளியல்புகளை உள்ளவாறறிந்து உண்மை தெருட்ட வல்ல நல்லிசைப் புலவர்கள் உண்மைக்கு மாறுவன சொல்லின் அறியாமையும் துன்பமும் உண்டாமாகலின் அவையிற்றை மறந்தும் உரையாராய் உண்மையொடு பட்டனவே மொழிகுவரெனவும் கருத்திற் பதித்தல் வேண்டும்."

—மறைமலையடிகள்.

# தமிழும் மலையாளமும்

[பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு, எம்.ஏ.,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை]

(முன் இதழ் ௪௯ ஆம் பக்கத் தொடர்ச்சி)

## சொல்லமைப்பியல்

சொல்லமைப்பியலில் தமிழிற்கும் மலையாளத்திற்கும் இடையே காணப்படும் வேற்றுமைகள் இரண்டு: அவை (1) முன்னிலை இடப்பெயர் வேற்றுமை உருபேற்கும் நிலையில் இகரம் உகரமாகத் தமிழில் திரிகிறது; மலையாளத்தில் இகரம் திரியாது நிற்பது. (2) மலையாளமொழியின் வினைமுற்றுக்கள் காலத்தைத்தான் காட்டும்; திணைபாலிடத்தைக் காட்டா. திணைபாலிடத்தைக் காட்டும் பாலறிகிளவிகளை வினைமுற்ருேடு சேர்க்கும் வழக்கும் மலையாளத்தில் கிடையாது; வேறுவகையான குறியீடுகளால் அவற்றை மலையாளமொழி உணர்த்துகின்றது. இத்தகைய பண்பு மூலத்திராவிட மொழியில் ஒரு காலத்தில் இருந்தது என்பதைத் திராவிட மொழியியல் அறிஞர் சுட்டு கின்றனர்.[1] ஆகவே, பிற திராவிட மொழிகள் மூலத்திராவிட மொழியிலிருந்து பிரிவதற்கு முன்பே, மலையாளம் பிரிந்தமையால்தான், மூலத்திராவிட மொழியின் தொன்மைக்கூறு அதனிடம் நின்று நிலைபெற்று வருகிறது. மற்றத் திராவிட மொழிகள், மூலத்திராவிட மொழியின் பிற்கால வளர்ச்சியை எதிரொலிக்கின்றன. இதனுல், மலையாள மொழி, தமிழிற்கு முன்பே மூலத்திராவிட மொழியை விட்டுப் பிரிந்துவிட்டது என்பர்.

## முன்னிலை இடப்பெயர் வேற்றுமையில் திரிதல்

இவ்விரு வேற்றுமைகளுள், முன்னிலைப் பெயர், வேற்றுமை உருபேற்கும் பொழுது உண்டாகும் மாற்றத்தைக் காண்போம்:

1. George K. M. op. cit., p. 82 & Indo-Iranian Journal, op. cit p. 58.

| | | தமிழ் | மலையாளம் |
|---|---|---|---|
| பெயர்ச் சொல் | ஒருமை | நீ | நீ |
| | பன்மை | நீம், நீர், நீயிர், நீவிர், நீங்கள் | நிங்ஙள், நீம் |
| வேற்றுமை உருபேற்கும் நிலையில் | ஒருமை | நின் > நுன் > உன் | |
| | பன்மை | நும் > உம் நுங்கள் > உங்கள் | நிங்கள் நீம் |

முன்னிலை இடப்பெயர் வேற்றுமை உருபேற்கும்பொழுது நீ > நின் என்று திரிவதோடு நில்லாமல், நுன் > உன் என்றும் நும் > உம் என்றும் நுங்கள் > உங்கள் என்றும் திரிந்து வழங்குவது மிகவும் பிற்பட்ட காலத்திய வழக்கு. மூலத்திராவிட மொழியில் இகர ஈறே (ந்+இ) வழக்கில் இருந்தது; மலையாளம் பிரிந்த காலத்தில் இப் பண்பினை அஃது ஏற்றுப் போற்றியது. பிற்காலத்தில் தமிழில் 'உகரம்' இடம் பெற்றது. இத்திரிபு சங்ககாலத்திற்கு முன்பே உண்டாயிற்று. ஏனெனில், சங்கத் தமிழில் வேற்றுமை உருபேற்ற முன்னிலை இடப்பெயர் இகரமாகவும் உகரமாகவும் ஒரே சமயத்தில் வழங்கியதைக் காணுகின்றோம் :

(எ - டு.)

நோய்க்குன் மேனியாய் நலம் (அகம். 222. 2)

இம்மனை அன்று ; அஃது உம்மனை (அகம். 56. 14)

தோற்ப நும் குடியே (புறம். 45. 5)

நும், வாய்ப் பொய்யும் (அகம். 48. 18)

எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர் (குறுந். 40. 2)

நீ ஓர் ஆகலின் நின் ஒன்று மொழிவல் (புறம். 5)

மறுத்தாங்கே நின்வயின் (கலி. 91 : 22)

இப் புதுமைப் பண்பு மலையாளத்தில் இடம்பெறவில்லை. எனவே, மலையாளம் சங்க காலத்திற்கு முன்பே மூலத் திராவிட மொழியிலிருந்து பிரிந்து சென்றிருக்க வேண்டும் என்று கூறுவர்.[1]

முன்னிலை இடப்பெயர் வேற்றுமை உருபேற்கும் பொழுது இ>உ ஆகத் திரிவது, பன்மைப் பெயராகிய 'நீம்' என்பதில் முதன்முதல், ஈற்று மகரத்தின் செல்வாக்கால் உண்டாகியிருக்க வேண்டும்.[2] பின்னர் ஒரே வகையான ஒத்ததன்மை கருதி, ஒருமையிலும் இம்முறை பின்பற்றப்பட்டிருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்.

திராவிட மொழிகளின் அமைப்பினை ஒப்பியல் முறையில் ஆராய்ந்த டாக்டர் கால்டுவெலும், யூலே பிளாக்கும் (Jules Bloch) முன்னிலை இடப்பெயரில் இகரம் உகரமாகத் தமிழிலும், பிராகுவி (Brahvi) யிலும் திரிந்து வழங்குவதைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.[3] யூலே பிளாக்கு, "ஒரே சமயத்தில் நும் எனும் வடிவம் காணப்படுவது, அதன் ஆற்றல்மிகு போக்கைக் காட்டுகிறது. அதன் இறுதியில் உள்ள மகரத்தின் செல்வாக்கால் இகரம் இதழ்குவி உயிராக மாற்றமுற்று இருக்கலாம் என்பதை எண்பிக்கும் வரையில் இவ்வடிவத்தைச் (நும்) சிறப்பு மிக்கதாகவே கருதலாம். தமிழில் 'நும்' எனும் வடிவம் உம், உன் எனும் திரிபுகளை அடைந்திருப்பதைக் காணுகின்றபொழுது அதை மிகவும் பழைமையான வடிவமாகவே கருதலாம்[4] என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கது.

தொல்காப்பியனார் 'நீயிர்' என்பது 'நும்மி'ன் திரிபெயர் எனக் கொண்டுள்ளார்:

> *நும்மின் திரிபெயர் வினாவின் பெயரென்று*
> *அம்முறை யிரண்டும் அவற்றியல் பியலும்.*
>
> (தொல். சொல். **143**)

இவற்றிலிருந்து 'நும்' என்பதும் மிகப் பழைமையான வடிவங்களுள் ஒன்று என்பது புலனாகின்றது. தென்திராவிட மொழி

---

1. George, K. M. — op. cit p. 82 & Indo-Iranion Journal op. cit, p. 58.
2. Kamil Zvelebil : — Personal Pronouns in Tamil and Dravidian, Indo-Iranian Journal, Vol. vi; 1962; pp. 67-68.
3. Caldwell, R. — op. cit. p. 387.
   Jules Bloch : — op. cit. p. 32
4. ஷை

யாகிய தமிழிலும் வட இந்தியத் திராவிட மொழியான பிராகுவி யிலும் இப் பண்பு காணப்படுகிறது. மூலத்திராவிட மொழியில் இவ்வியல்பு இருந்திருத்தல் வேண்டும் என்பதற்குப் பிராகுவி மொழி சான்று பகருகிறது. மலையாளமும் தமிழும் தென் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை. இவை யிரண்டும் வேறு மொழிகளாகப் பிரிவதற்கு முன்னரே மூலத்தென் திராவிடத்தில் இவ்வியல்பும் இருந்திருத்தல் கூடும். மலையாளம் கிளைமொழியாகப் பிரிந்த காலத்தில் இகரவடிவத்தை மட்டும் போற்றிக் காத்தது; தமிழ் உகர வடிவத்தைப் போற்றி வளர்த்தது என்று நாம் கூறலாம்.

**பாலறி கிளவி**

மலையாள மொழியில் பாலறிகிளவி வினைமுற்றுக்களோடு சேர்க்கப்படுவதில்லை என்பதனால், அதை மிகப் பழைமையான திராவிடமொழி என்று கருதுவதும். தமிழிற்குத் தமக்கை என்று கூறுவதும் உண்மைக்கு மாறான செய்திகளாகும்.

மலையாளமொழி தவிர, ஏனைய மொழிகளில் வினை முற்றுக்கள் காலத்தோடு திணைபாலிடமும் உணர்த்துகின்றன. பழைய மலையாளச் செய்யுள்களில் அவை இடம பெற்றுள்ளன. எனவே திணைபாலிடம் காட்டாத பண்பை ஒரு சிறப்புமிக்க தொன்மைப் பண்பு என்று கொள்ளுவதற்கு இல்லை! அண்மைக் காலத்தில் மலையாள மொழியில் பையப் பையத் தோன்றி வளர்ந்த பண்பென இதனைக் கருத இடமுண்டு. இதைப்பற்றி ஆராய்ந்த அறிஞர் பலருள், L. V. இராமசாமி ஐயர் இங்குக் குறிப்பிடத் தக்கவராவர். அவர் மலையாள மொழியைப் பற்றிப் பொதுவாகவும், இப் பண்பைப் பற்றிச் சிறப்பாகவும் கொண் டுள்ள கருத்துக்கள் இங்குக் குறிப்பிடத் தக்கன.

(1) இடைக்காலத் தொடக்கத்தில் தமிழிலிருந்து (ஏறக் குறையப் பத்தாம் நூற்றாண்டு அளவில்) கிளைத்துத் தனிமொழி யாக மலையாளம் பிரிந்தது. அதற்கு முன்னர், தமிழின் கிளை மொழிகளுள் ஒன்றாகவே மலையாளம் இருந்து வந்தது.

(2) காலந்தோறும் படிப்படியாகத் திணை, பால், எண், இடம் உணர்த்தும் விகுதிகள் மலையாள மொழியில் கைவிடப் பட்டு வந்தமைக்குரிய சான்றுகள், அம்மொழியின் இலக்கியங் களில் காணப்படுகின்றன. பழைய மலையாள நூல்களில் காலங் காட்டும் வினைவடிவங்களில் திணை, பால், எண், இடம் உணர்த்தும் கூறுகள் பொதுவாகக் காணப்படுகின்றன. ஆயினும், வினைமுற்றுக்கள் இத்தகைய விகுதிகள் பெருமலேயே வழங்கப்பட்டமைக்கும் சான்றுகள் சில உள்ளன. காலப்

போக்கில் இப் பண்பு அம்மொழியில் பல்கிப் பெருகியது. வினை முற்றுக்கள் திணை, பால், எண், இடம் காட்டும் விகுதிகளைக் காலந்தோறும் சிறிது சிறிதாகக் கைவிட்டு வந்த முறையில் சில படிநிலைகள் உள்ளன. லீலா திலகத்தில் எல்லாவகையான வினைவடிவங்களுக்கும் திணை, பால், எண், இடம் உணர்த்தும் விகுதிகள் தேவை எனும் விதி வகுக்கப்படடுள்ளதைக் காணுகின்றோம். ஆனால், கிருஷ்ண காதையில், இவ்விதி முற்றிலும் பின்பற்றப்படவில்லை. சில வினைச் சொற்களின் விகுதிகள் திணை, பால், எண், இடம் உணர்த்துவனவாக உள்ளன. வேறுசில இத்தகைய விகுதிகளைப் பெறாதவையாக உள்ளன. இத்தகைய படிப்படியான மாற்றம் இலக்கியத்தில் மட்டும் உண்டானதாக இருந்திருக்கலாம். ஆனால், அன்றைய வட்டார மொழியிலும், சமூகப் பேச்சு வழக்கிலும் இத்தகைய திணை, பால், எண், இடம் உணர்த்தும் விகுதிகளைப் புறக்கணிக்கும் போக்குப் பெருகியது. மேற்கண்ட இலக்கியங்கள் காலங் கடந்த நிலையில் இப் போக்கினை எதிரொலிக்கின்றன என்று நாம் கூறினால், அது தவறாகாது.

(3) பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த லீலா திலகத்தில் திணை, பால், எண், இடம் உணர்த்தும் விகுதிகளைக் கொண்ட 'வந்தான்' 'இருந்தான்' போன்றவற்றை எடுத்துக் காட்டி அவை இழிசினர் வழக்கென்று கூறப்பட்டுள்ளமை நாம் இங்குக் கருதத்தக்கதாகும். இதிலிருந்து, பலவேறு சாதிக்காரர் பேசிய கிளைமொழிகளிலிருந்து இந்தப் பண்பு அக்காலத்தில் முற்றிலும் நீக்கப்படவில்லை என்னும் உண்மை புலனாகின்றது.

(4) இலட்சத் தீவுகளிலும், அமினிதீவுகளிலும் வாழும் 'மாப்பிள்ளை' மார் பேசும் மொழி, மலையாளத்தின் ஒருவகைக் கிளைமொழியே! இக் கிளை மொழியில் வினைமுற்றுக்கள் திணை, பால், எண், இடம் உணர்த்தும் பண்பு இன்றுவரை வழக்கில் இருந்து வருகிறது.

(5) மலையாள மொழி நீங்கலாக உள்ள பிற திராவிட மொழிகள் யாவற்றிலும் இப் பண்பு நிலையான வாழ்வைப் பெற்றுள்ளது. எனவே, மூலத்திராவிட மொழியில் இப் பண்புதான் இருந்திருக்க வேண்டும் என்று நாம் துணிந்து கூறலாம்.[1]

---

1. Ramaswami Aiyar, L. V.. The Evolution of Malayalam, Morphology. Ernakulam, 1936; pp. 52-62.

மலையாள மொழியின் இலக்கண இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு இராமசாமி ஐயர் இம் முடிவிற்கு வந்துள்ளார். அவருடைய கருத்தினைக் கல்வெட்டுகளில் காணப்படும் சான்றுகள் அரண்செய்கின்றன. "இவ்வியல்பு (வினைமுற்றுக்கள் திணை, பால், எண், இடம் உணர்த்தும் விகுதிகளைப் பெறுமை), காலம் செல்லச் செல்லக் கல்வெட்டுகளில் பெருகிக் கொண்டே வந்துள்ளது"[35] என்று A. C. சேகர் எனும் மலையாளமொழி அறிஞர் மொழிந்துள்ளமையும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

**புதுமைப் பண்பு**

இவற்றிலிருந்து வினைச்சொற்கள் திணை, பால், எண், இடம் உணர்த்தா இயல்பு மலையாள மொழியில் அண்மைக் காலத்தில் தோன்றி வளர்ந்த புதியதொரு பண்பு என நாம் உறுதியாகக் கூறலாம்

**தாயும் சேயும்**

இவ்வாய்வுரையினால், நாம் பெறக்கூடிய விளக்கங்கள் இரண்டு. தமிழ் மொழியே மலையாளத்திற்குத் தாய்மொழியாகும் என்பது முதன்மையானது. இதனால், மலையாளத்தைத் தமிழிற்குத் தமக்கை என்று கூறுவது பொருத்தமற்ற கருத்து என்பது புலனாகின்றது. இரண்டாவதாக, மலையாளமொழி மிக அண்மைக்காலம் வரையில் மேற்குக் கடற்கரைப் பகுதியில் தமிழின் வட்டார (கிளை) மொழியாக இருந்து வந்தது என்பதும், சற்றேறக்குறைய எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே அவ் வட்டார மொழி (மலைநாட்டுத் தமிழ்) தனிமொழியாகத் தாயாகிய தமிழிலிருந்து பிரிந்து, மலையாளமாக மாற்றமுற்றிருக்க வேண்டும்[2] என்பதும் தெளிவாகின்றன.

———

1. Sekhiar, A. C. : Evolution of Malayalam, Deccan College and P. G. Research Institute, Poona, 1953; p. 105.

2. சொற்புள்ளி இயல் பகுப்பாய்வு (Lexico - statistic Analysis) முறையில் திராவிட மொழிகளின் தோற்றம் பற்றிய கால வரன்முறையைத் திருமதி தெ. மீ. காமேசுவரி அவர்கள் ஆராய்ந்துள்ளனர். அவ்வாய்வில், கி. பி. 1100 க்கும் 1500 க்கும் இடையில் தான், தமிழிலிருந்து மலையாளம் பிரிந்து, தனிமொழியாக மாற்றமுற்றிருக்க வேண்டும் என்னும் முடிவிற்கு அவர் வந்துள்ளார். இம் முடிபும் நம் கருத்தை உறுதிப் படுத்துகிறது.

காண்க: The Chronology of Dravidian Languages—A Lexico-statistic Analysis. in the Dravidian Linguistics (Seminar Papers), Annamalai University, 1969; pp. 272-73.

# ஆப்பிரிக்கச் சுற்றுலா

**[கவியோகி சுத்தானந்த பாரதியார்]**

(முன் இதழ் ௬௮-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 16. முனையை நோக்கி

**வழிப் புதுமைகள்**

நாங்கள் அழகான உந்து வண்டியில் முந்திேனோம். காலை 5 மணிக்குள் சிவசக்தி வழிபாட்டை முடித்துக் கொண்டு புறப் பட்டோம். ஒரு வண்டியில் அன்பர்; இன்னொரு வண்டியில் படமெடுகருவிகள், ஒலிக்கருவிகள், இசைக்கோவைகள். வழியில் உள்ள கிராமங்களில் இசை முழக்கத்துடன் பொது நிலைச் சைவத்தை விளக்கினேம. எனது ஆங்கிலப் பேச்சு ஜுலு மொழியிலும் விளக்கப் பெற்றது.

800 மைல்கள் உந்திச செல்ல வேண்டும். இடையிடையே தேவார முழக்கம் நடந்தது. முதன்மையாக அப்பர் தேவாரம். சூலபாணியான சிவனருளிய இந்தச் சமயத்தில் உங்களுக்கு ஏதாவது முரண் காண்கிறதா? என்று நான் கேட்பதுண்டு "போங்கா! ஓங்கே லுங்கிலி" (Thanks All ...Very good) "எல்லாம் நன்று... நன்றி" என்று ஆரவாரிப்பதுண்டு சிலுவா என்பதில் லுவை எடுத்தால் சிவ-ஆகிறது என்பதை ஜுலுப் பாதிரி களும் வியந்தனர். ஏசு என்பது ஈசு ஈசன் என்பதைப் போற்றினர். மேரியை மாரி (மாரியம்மன்) என்றல் மகிழ்ந்தனர். கிராமமக்கள் எங்களுக்கு நல்ல வரவேற்பளித்தனர். அவர் களுக்கு நாங்கள் பிஸ்கோத்தும், பெப்பர்மெண்டும் அள்ளி விட்டோம். வழிநெடுக எத்தனையோ வியன்களைக் கண்டோம். மலைச்சரிவுகளில் நீலக்கற்கள், காந்தக்கற்கள், மைகாப் பாறைகள், கந்தகக்கற்கள் எல்லாம் கண்டோம். அங்கங்கே தீக்கோழிப் பண்ணை, நீர்யானைகள், வரிக்குதிரைக் கூட்டம்—காட்டுப் பறவைகள்—காட்டுப் பன்றிகள் எல்லாம் கண்டோம்.

திடீரென்று ஒரு கிராமத்தில் எங்கள் உந்து வண்டி பழுதாய் விட்டது... உடன் கிராமமக்கள் சுற்றி வளைத்துக் கொண்டு உதவி செய்தனர். சிலர் உந்திப் பொறிஞரை (Motor mechanist) அழைத்து வந்தனர். இதற்குள் அடுத்த ஊர் சைவசித்தாந்த சங்கத்திற்குத் தொலைபேசினேம். பழுதான உந்தியை ஒரு வண்டி தூக்கியில் (Motor-lift) ஏற்றி

அனுப்பினோம். புதிய கார் வந்ததும் ஏறிச் சென்றோம். மக்கள் ஆரவாரத்துடன் வழியனுப்பினர். எங்கள் வண்டி ஆரஞ்சு நாடு (Orange free state) பசுடோ லாண்டு (Basuto land) வழியே குபு குபுத்தது. காடும், கரையும், மலையும் திடலும் விரவி வழியில் இயற்கை பசும் பொன்னகையுடன் எங்களுக்கு வழித்துணை வந்தது. சில இடங்கள் கடும் பொட்டல். வெயிலில் அடிவைக்க முடியாது. இடையிடையே வழிதவறி ஒரு மைல் செல்வோம். ஒரு டச்சுக்காரர் இப்படி வழி என்று காட்டி நடத்துவார். என் பெயர் நாடெங்கும் பரவியது; செய்தித்தாள்களிலும் எங்கள் பயணக் குறிப்பு வந்தது. ஆதலால் பல வெள்ளைக்காரரும் குசராத்திகளும் வழியில் வந்து வரவேற்றனர். அப்போதெல்லாம் ஒரு தேவாரம் இசைக் கருவிகளுடன் பாடி ஆங்கிலத்தில் விளக்கி முன்செல்வோம். எம் ஆங்கிலப் பாடலுக்கு ஆடலும் நடக்கும். இப்படியே நாங்கள் இருட்டு மட்டும் வண்டியில் வாவினோம். இடையில் எங்களுக்குப் பழச்சாறு, ரொட்டி, பால் இவை உண்ணக் கிடைத்தன.

### போர்ட்டு எலிசபெத்து (Port Elezabeth)

'சோதனைகளும் வாதனைகளும் உண்டு; எல்லாம் திருவருளாலே தாண்டி இரவு எட்டு மணிக்கு போர்டு எலிசபெத் திற்கு வந்தோம். அங்கே பழக்கடை வாண்டையார் எங்களை வரவேற்றார். பழக்கடை என்றால் நம்நாட்டு வாழைப்பழக்கடை போன்றில்லை. எல்லாப் பழங்களும், ஆப்பிள், ஆரஞ்சு, மா, வாழை, பைனபிள், பீச்சு, இலந்தை, கொய்யா—எல்லாம் கூடை கூடையாகச் சரக்கு உந்தியில் வந்து குவியும், கூடை கூடையாக விற்பனை யாகிச் செல்லும்.

"மாரி பெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்திற் கேற்றவும்
நிலத்தினின்று நீர்ப் பரப்பவும்
அளந்தறியாப் பல பண்டம்
வரம்பறியாமை வந் தீண்டி
மதிநிறைந்த மலி பண்டம்
பொதி மூடைப் போரேறி", (சிலப்பதிகாரம்)

வாண்டையார் முன்னோர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தி லிருந்து சென்றவர்கள். அவர்கள் தோட்டங்களிலும், சுரங்கங்களிலும் உழைத்து ஈட்டியதைக் கொண்டு கடை கண்ணிகள் வைத்துப் பணஞ் செழித்தனர். அவர்கள்

கடலருகே உள்ள வெள்ளையர் தெருவில் வீடு வாங்கி இருந்தார்கள். ஆனால் இந்தியர் தலைவிதி, தமிழர் ஊழ்வினை தொடர்ந்தது. இந்த இடம் வெள்ளையருக்கு வேண்டும் (Blankies) நீங்கள் பத்து மைல் தள்ளியிருக்க வேண்டும் என்று உத்தரவு பிறந்தது. வாண்டைத் தமிழர் மயங்கவில்லை. இருநூறு பேர் குறித்த இடத்திற் குடியேறி உயர்குன்றில் ஒரு பெரிய மாரியம்மன் கோவிலும் முருகன் கோயிலும் கட்டி விழாக் கொழித்தனர். செலவு 45 லட்சம். வெள்ளைக்காரர் போலவே புதுமனைகள் எழுப்பித் தமிழர் தமிழை வளர்த்தனர். அடாடா என்ன வரவேற்பு; என்ன ஆடல் பாடல்; அழகு, அமளி.... கோலாட்டம், கரகம், பரதநாட்டியம் எல்லாம் நடந்தன. என் பாட்டுகள் அவர்களுக்குப் பாடம்; அழகான ஆடற்குறிகளுடன் இரண்டுமணி நேரம் கலைவிருந்தளித்தனர்.

நாடுசெழித்திட வீடுசெழித்திட
நல்வளந்தந்தருள் மாரியம்மா
பாடுபடும் ஏழைமக்கள் பசிதீரப்
பார்த்தருள்வாய் சக்திமாரியம்மா—துன்பம்
தீர்த்தருள்வாய் முத்துமாரியம்மா.

நஞ்சை தழைத்திடப் புஞ்சை தழைத்திட
நல்லமழைபொழி மாரியம்மா
பஞ்சம் பிணிதுயர் பாபம் விலகிடப்
பரிவு கூர்ந்தருள் மாரியம்மா
நோய் நொடிவாராது மக்கள் மனைவியர்
நூறாண்டு வாழ்ந்து மகிழ்ந்திடவே
தாயமுதே நல்ல சக்தியளித்தருள்
தாளிற் பணிந்தனம் மாரியம்மா!

என்று வரும் பாடல்கள் முழங்கின. பிறகு நான் அன்புத் தமிழின் இன்பக்கூத்து என்ற பொருளை விளக்கி, அற்புதத் தேவாரங்களைப் பாடி இசைச் சொற்பொழி வாற்றினேன். பிடிலும் முழவும் இனிது அமைந்தன. இஃதானதும் முருகன் கோவிலில் வழிபட்டோம்.

நின்னை நினைக்க, நினது புகழ்பாட
நின்னையே யானுக நேசிக்க—என்னையே
முற்று மளித்தேன் முருகா வுன்காதலே
பற்றிப் பிதற்று மெனைப்பார்

அருணார் முகமும் அடியார்க் கபயம்
தருபொற் கரமும் தணவார் விழியும்

கருணைப் பொலிவும் கனிவாய் நகையும்
திருமார் பழகும் திகழும் முருகா

என்று ஆர்வமாலை சூட்டி முருகனை வணங்கி "சூரனை வென்ற வீரன்" என்ற பொருள்பற்றிப் பேசி அதில் வீரவாகு முருகனிடம் கேட்ட வரத்தை விளக்கினேன்.

"கோலநீடிய நிதிபதி வாழ்க்கையும் குறியேன்
மேலையிந்திரன் அரசையும் கனவிலும் விரும்பேன்
மாலயன்பெறும் பதவியும் பொருட்டென மதியேன்
சாலநின்கழற கன்பையே வேண்டுவன் தமியேன்"

இதே மாதிரி சேக்கிழாரும் :

"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் குழைந்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருக்காலும் மறவாமை"

வேண்டும் என்கிறார்.

திருவடிப் பெருமைபற்றி அன்றும் மறுநாளும் பேசினோம். மறுநாள் விருந்து வேளாண் பண்பாட்டில் வியன்பெற நடந்தது. பல ஐரோப்பியர்கள் வந்து கண்டு யோக நுணுக்கங்களை அறிந்தனர்.

### ஈஸ்டு லண்டன்

பிறகு நாங்கள் பெரிய துறைமுகமான ஈஸ்டு லண்டன் சென்றோம். அங்கே குசராத்திகள் பெரும்பாலர் ; நல்ல தொழிற் செழிப்படைந்துள்ளனர். லலிதா ஒரேலே என்ற ஆங்கில மாது தமது தோழியர் தோழருடன் வந்து தியானமுறை பயின்றார். என் புதிய இருக்கைகள், மூச்சுப்பயிற்சி, ஒருமை கூடல் எல்லாம் உடனுடன் வண்ணப் படங்களாகப் பிடித்து எனக்கும் ஒரு படஅடுக்குத் தந்தனர்.

நமது நாட்டு யோகக் கலையை உலகம் வேண்டுகிறது. ஆனால் பலர் ஆசனங்களையும் பிராணயாமத்தையுமே யோகமெனக் காட்டி யோகக் கலையின் ஆழ்ந்த உட்பயிற்சிகளை அசட்டைசெய்து உலகம் அறியாது மூடுமந்திரமாக்கி விட்டனர். யோகம் என்பது ஓகம், உகுதல், உயிர் இறையுடன் இரண்டறக் கலத்தல், அக் கலப்பிற் கிணங்கிய அன்பு, அருள், அறிவு, அருட்பணி இவற்றைப் பயிலல் ஆகும். அங்கே மகேச யோகியின் மேலுயர் தியானம் (Transcendent Meditation) பரவியிருந்தது. அதுவும் யோகத்தின் ஒரு சிறிதே. யோகக்கலை முழுதும் Gospel of Perfect Life, Secret of yoga ஆகிய

இரண்டு நூல்களில் விளக்கிப் பயிற்சி முறையும் படிப்படியாகக் குறித்துள்ளேன். அந்த நூல்களை அன்பர் விரும்பிப் படித்தனர்.

அன்று பொதுக்கூட்டத்தில் எட்டுறுப்பு யோகத்தை (அட்டாங்க யோகம்) தெளிவாக விளக்கினேன். முழுதும் வண்ணப் படமாகி மறுநாளே வெள்ளித் திரையில் காட்சியளித்தது.

குசராத்தியர் இங்கே அச்சகம் வைத்திருக்கிறார்கள். எல்லாம் தானியிங்கிப் பொறிகள் (automatic up to date machines). பொறிகளுக்கேற்றபடி கூலி வேலை குவிகிறது. ஒரே வாரத்தில் ஒரு பெரிய நூலை அச்சிட்டு மடித்து வண்ண வண்ண அட்டை இணைத்து அழகழகாகக் கட்டி இதோ பதினாயிரம் படிகள் என்று மூட்டைகட்டி வீட்டில் கொண்டுவந்து தருகிறார்கள். இன்னும் பதினாயிரம் வேண்டுமா....இதோ.... ஐந்து நாட்களில். அதே அச்சுத்தகட்டை இணைத்து... காகிதங்களை அடுக்கி....டகடகடகடகட ட....பதினாயிரம்....பணம் செலுத்தி....எடுத்துச் செல்லும் என்று தருகிறார்கள். அத்தகைய அச்சகம் நம் நாட்டில் எத்தனை உள்ளன? இப்படியே ஒவ்வொரு துறையிலும் உலகில் முன்னேற்றம் காண்கிறோம். எனது Revelations of Meikandar இரண்டே நாளில் அப்படியே படம் பிடித்துத் தகட்டில் வடித்து...நூல் வந்துவிட்டது. முதலும் போடுகின்றனர், தொழிலும் முந்துகிறது. ஊதியமும் ஓங்கி வளர்கிறது...உழைப்பவர் எங்கும் தமிழரே—செழிப்பவர்? உரிமை ஒன்றுதான் ஊசலாடுகிறது. எதிலும் அளவு...இத்துடன் நில்... பின்னே செல்...என்ற திடீர்க்கட்டளை. எப்படியோ இன்று நம்மவர் நன்றாகப் பொருளீட்டி நன்றாக நுகர்ந்து, உகந்து வாழ்கிறார்கள். நாளை வாழ்விற்கும் வழி பிறக்கும் என்றே நம்புகிறார்கள். சிலர் இந்தியாவுக்கே திரும்பி வரப் பார்க்கிறார்கள்.

*காலவினை யெப்படியோ*
*　　கண்பாராய் மாரியம்மா?*
*ஞாலமிசை எந்தமிழர்*
*　　நாடகந்தான் இப்படியோ?*

என்று பாடி...அனைவருக்கும் அன்புகூறி அங்கிருந்து நேராக விமானத்தில் கேப்டவுன் வந்து சேர்ந்தோம். எங்கள் வண்டிகளை முன்பே இங்கே அனுப்பிவிட்டோம்.

(தொடரும்)

# இந்தோ - ஐரோப்பிய இனங்கள், மக்களின் தோற்றம்*

[நூலகர்]

மக்களினத்தின் தோற்றத்தையும் வரலாற்றையும் பற்றி உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்துவரும் அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் பல்வகையான கருத்துக்களை நூல்கள் வடிவில் வடித்துத் தந்துள்ளனர். மனித இனம் தோன்றிய இடம், மனித நாகரிகத்தின் தொட்டில் கடலுள் மறைந்த லெமூரியாக் கண்டமே என்று ஒருசார் அறிஞர்கள் எழுதி வருகின்றனர். இக் கருத்தை வலியுறுத்த எழுதப்பட்டதே 'இந்தோ - ஐரோப்பிய இனங்கள், மக்களின் தோற்றம்' என்னும் நூல். லெமூரியாக் கண்டமென்பது தமிழ்ப் புலவர்களின் கற்பனையில் தோன்றியது என்று வரலாற்றுப் பேரறிஞர்கள் இற்றை நாளிலும் கூறி வருகின்றனர். இந் நிலையில் தமிழ்ப் புலவர் அல்லாத ஒருவர், ஏறத்தாழ ஆயிரம் பக்க அளவில் ஆங்கிலத்தில் நாற்பது ஆண்டுகட்கு முன்பு ஒரு நூலை எழுதியுள்ளார் என்றால் உண்மையிலேயே இது வியப்புக்குரிய செய்தியேயாகும். இவ்வளவு பெரிய நூலும் முற்ற முடிந்த நூலன்று என்று தம் முன்னுரையில் அதன் நூலாசிரியர் வி. சொக்கலிங்கம் பிள்ளை குறிப்பிட்டுள்ளார். இதன் தொடர்பாக மொத்தம் ஐந்து தொகுதிகள் மொத்தம் ஐயாயிரம பக்க அளவில் எழுதத் திட்டமிட்டு முதல் தொகுதியை மட்டும் 1935இல் வெளியிட்டார். அதைத் தொடர்ந்து பிற தொகுதிகள் வெளிவந்தனவாகத் தெரியவில்லை.

லெமூரியா அல்லது கோண்டுவானா என்ற பகுதி இருந்தது என்று கூறுவதோடு மட்டும் நில்லாது, உலக மககளின் பிறப்பிடமே அப் பகுதிதான் என்று இந் நூலில் வற்புறுத்திக் கூறுகிறார். "உலகில் முதலில் இரண்டே இரண்டு மக்களினங்கள் தாம் தோன்றின. ஒன்று திராவிடர் இனம். மற்றது ஆரியர் இனம். இவ் வீரினங்களுமே இப் பகுதியில் தோன்றின. கடல் கோளுக்குப் பின் திராவிடர் இனம் இந்தியா அளவில் நின்றுவிட்டது. அதற்கும் வடக்கே சில இடங்களுக்கும் சென்றது. ஆனால் ஆரிய இனம் ஐரோப்பிய நாடுகள் முழுவதும் பரவி, பின்னர் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவியது.

* The Origin of the Indo - European races and peoples-by V. Chokkalingam Pillai. Vol. I 1935. Tirunelvely.

ஆயிரக்கணக்கான ஆண்டுகட்குப் பின் ஆரிய இனம் மீண்டும் இந்தியாவுக்குள் நுழைந்தது. வட இந்தியா வில் பரவியிருந்த திராவிட இனம் பின்னடைந்து தென் னிந்தியா அளவில் நின்றுவிட்டது. ஆரிய இனம் ஐரோப்பா முதலிய வெளிநாடுகளிலும் இந்தியாவிலும பரவியுள்ளது.''* இதுதான் இந் நூலின் மையக கருத்து.

நூலாசிரியர் தம் கருத்தை நிலைநாட்ட அறிவியல், மரபின இயல், நிலவியல் முதலிய அரிய பல அறிவுத் துறைகளை நாடியுள்ளார். இத் துறைகள் பற்றி மேனுட்டறிஞர்கள் பலர் எழுதியுள்ள நூலகளிலிருந்து பயனுடைய மேற்கோள்களை நூலின்கண் ஆங்காங்குக் காட்டியுள்ளார்.

கடலுள் மூழ்கிய நிலப்பகுதியில் வாழ்ந்த தொன்மை இன மக்கள்; அவர்கள் பயன்படுத்திய போர்க்கருவிகள், இருவேறு இன மக்களிடையே அடிக்கடி நடைபெற்ற போர்கள்; அம் மககளின் உருவ, முகத்தோற்றங்கள் முதலியவை நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இவற்றை ஆராய்ச்சி செய்யத் தாம் மேறகொண்ட ஆய்வு முறை (Methodology) பற்றி ஆசிரியர் 20 பக்கங்களில் விரிவாக விளக்கியுள்ளார்.

இடையிலே கடல்கோள் நிகழ்கிறது. அதன்பின் அப் பகுதியில் வாழ்ந்து வந்த இருவேறு இன மக்கள் தென்பக்க மாகச் சென்று திராவிட மக்களினம் இந்தியாவிலேயே பெரும் பகுதி தங்கிவிடுகிறது. ஆரிய இனமோ இந்தியாவில் சிறிதளவு கூடத் தங்காது அனைவரும் ஐரோப்பிய நாடுகட்குச் சென்று விடுகின்றனர்.

இவ்வாறு உலகின் பல்வேறு பகுதிகளில் ஆரிய இனம் தங்கிவிட்டதை அவ்வந்நாட்டுப் பழைய காப்பியங்களும்

---

* "...The Indo - European flock is composed of two hostile races.. for the sake of simplicity, we shall style them for the present as A and B races. Their native home is the Atlantis or the Human Cradle that now lies buried in the bed of the Indian Ocean. About the closing scenes of their life in that centre, they fought a great battle in which the B race was completely vanquished and brought under the Yoke of the victorious A race. Sometime after, the Atlantis was torpedoed by a violent volcanic explosion and sunk beneath the waters of the Indian Ocean. After its submergence, the two races are seen quitting their ancient home, migrate northwards and settle in various parts of the northern hemisphere." (p. viii)

புராணங்களும் விளக்கும் வகை இந் நூலில் விரிவாக ஆராயப் பட்டுள்ளது. செல்டிக் காப்பியங்கள், கேலிக் காப்பியங்கள், பிரிட்டிசுக் காப்பியங்கள், டியுடோனிக் காப்பியங்கள் அவ்வின மக்கள் தோன்றிய வரலாற்றை எடுத்து விரித்துரைக்கின்றன.

நூலில் ஆங்காங்கு நாட்டுப் படங்களும் வரை படங்களும் ஓவியங்களும் சிற்பங்களின் படங்களும் சேர்க்கப்பெற்றுள்ளமை நூலுக்கு அணிசெய்வதோடு இத்தனை வகையான சான்றுகள் உள்ளன என்பதைச் சாற்றுவது போலும் உள்ளன.

இத்துணை அரிய, பெரிய நூலை எழுதியவர் வி. சொக்கலிங்கம் பிள்ளை என்பதை முன்னரே கண்டோம். தமிழ்ச் சிறுகதை யுலகில் புதுமையைப் படைத்த புதுமைப்பித்தனின் தந்தையார் இவர். மகன் படைப்பிலக்கியத்தில் தலைசிறந்து விளங்கிய நிலையில், தந்தை இறைவன் படைப்பிலக்கியத்தை வரலாற்றுக் கண்கொண்டு நோக்கியுள்ளார். இவர் தென்னார்க்காடு மாவட்டத்தில் தாசில்தாராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். ஓய்வு பெற்றபின் திருநெல்வேலியில் பொருநை யாற்றங்கரையிலமைந்துள்ள வண்ணாரபேட்டையில் நிலையாகக் குடியேறினார். தம் ஓய்வு காலத்தை இந்த ஆராய்ச்சியில் ஈடுபடுத்தி இருபது ஆண்டுகளில இந்த நூலை எழுதி வெளியிட்டுள்ளார். ஆயிரம் பக்கங்களில் முதல தொகுதியை வெளியிட்டவாறு பிற ஐந்து தொகுதிகளையும இவர் வெளியிட்டிருப்பாராயின் உண்மையிலேயே தென்னகத்து மாந்தர்களைப் பற்றிய சிறந்த ஆய்வு நூலாக நிலையான இடம் பெற்றிருக்குமென்பதில் ஐயமில்லை.

---

## இந்திய நாட்டின் பழங் குடியினர் தமிழரே!

*இவ்விந்திய நாட்டின் வடமேற்கு மூலையைத் தவிர மற்றை அதன் நான்கெல்லைக்குட் பணடைக் காலம் முதல் இன்று காறும் பரவி நிறைந்திருப்பவர் தமிழரும் அவர் இனத்தவரான திராவிட மக்களுமே யன்றி வேறு பிறர் பெரும்பாலும் இலர்.*

—மறைமலையடிகள்

# தமிழில் எழுதுவோம்

[ஆட்சிச்சொற் காவலர் கீ. இராமலிங்கனுர் எம். ஏ.]

(முன்பரல் ௬௫௨ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 9. இலக்கணம் இடர் அன்று

### i. எழுதத் தடை இலக்கணம் என்பர்

இலக்கணம் என்ருலே, பொதுவாக மாணவர்களுக்கு விளக்கெண்ணெயாக இருக்கிறது. ஏன், மாணவர்களைச் சொல்ல வேண்டும்? தமிழ் தெரிந்த பலருமே இலக்கணத்தை அச்சத்தோடேயே பார்க்கின்றனர். எந்த மொழியிலுமே இலக்கணம், எழுதுவதற்கு இடையூருக இருப்பதாகக் கருதுகின்றனர். பிற மொழிகளில் வரையும்போது துணிச்சலாக இலக்கணப் பிழையோடு எழுதிவிடவும் முற்படுகின்றனராயினும தமிழில் எழுதும்போது அத்தகைய துணிச்சல் பலருக்கு வருவதில்லை. சிறிதளவு படித்தவர்களுங்கூட என்ன பிழை எங்கே நேர்ந்து விடுமோ என்னும் ஐயநினைவு மீதுரப்பட்டுத் தமிழில் எழுதத் தயங்குவதைப் பார்க்கிருேம்.

அலுவலகங்களில் இன்று வேலை பார்க்கும் பெரும் பாலானவர்களுக்கும் இந்த அச்சமும் ஐயமும் மனத்தில் பின்னிக் கிடக்கின்றன. ஆங்கிலம் அயல்மொழியாதலின் பிழையுணர்வு எளிதில் தோன்ருத காரணத்திஞல் அதிலேயே எழுதி விடுவோமே என்று எண்ணுகின்றனர். மேலும் ஆங்கிலத்தில் வரைவுகளும் குறிப்புகளும் முன்னமே பல வரையப் பெற்று அவற்றைத் தாங்கிய பழந்தாள்கள் எளிதில் ஆவண அறையில் (Record room) கிடைக்கின்றன. அவற்றைப் பார்த்துச் சூழ் நிலைக்கேற்ற சில மாற்றங்களுடன், புதுக் குறிப்புகள் வரைவுகளை விரைவில் எழுதிவிட முடிகிறது. தமிழில் வரைவது என்ருல் பார்த்து எளிதில் அமைத்துக் கொள்ள தமிழில் எழுதிய முன் தாள்கள் கிடைப்பதில்லை. அண்மையில் தானே தமிழில் எழுதும் முயற்சி மேற்கொள்ளப் பெற்றிருக்கிறது. எனவே, தமிழ் முன் தாள்கள் எல்லாவகைக் குறிப்புகளுக்கும் வரைவுகளுக்கும் எப்படிக் கிடைக்கும்?

இந்நிலையில், எழுதுவதற்கு ஏற்படும் தடைகளில் ஒரு பெரிய தடையாகத் தமிழ் இலக்கணத்தில் கடுமையென்று சொல்லப்பட்டு வருகிறது. உண்மையில் இலக்கணத்தைத், தமிழில் ஆட்சி நடத்துவதற்கு ஒரு தடுப்புக் கல்லாகக் கொள்ள

வேண்டியதில்லை என்பதை விளக்குவதே இவ் அதிகாரத்தின் நோக்கம். தமிழ் இலக்கணம் எவ்வளவு அறிவுக்குப் பொருத்த மானதாகவும் இலசாகவும் இருக்கின்றது என்பதையும் எனவே பிழை நேர்ந்து விடுமோ என்னும் ஐயமோ அச்சமோ இல்லாமல் தமிழில எல்லாவற்றையும் எழுதும் உறுதிகொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுததுவதே இங்கு ஆற்ற மேற் கொண்ட கடமையாகும்.

## ii. உண்மையாகவே அஞ்சுநர் சிலர்

இவ்வாறு ஐயமும் அச்சமும் கொள்பவர்களில் சிலர் அலு வலகச் செய்திகள் யாவற்றையும் தமிழிலேயே எழுதவேண்டும் என்னும் உண்மைப் பற்றுடையவர்களாக இருக்கின்றனர். தாம் தமிழில் எழுதுவது இலக்கணப் பிழையுடையதாக இருந் தால் அவ்வரைவு குறிப்புகளைப் பார்க்கின்றவர்கள் தமது அறியாமைக்குத் தம்மை எளனம் செய்வார்களே என்று எண்ணு கின்றனர். மேல் அலுவலர்கள் தம் ஆற்றலைப் பற்றிக் குறைவான கருத்து கொண்டுவிட்டால் அது தம் வளர்ச்சிக்கு இடையூருகுமே என்றும் நினைக்கின்றனர். மேல் அலுவலர் களைக் குறித்து அங்ஙனம் அச்சங்கொள்ளத் தேவையில்லை.

பொதுவாக இன்று மேல்நிலைகளில் உள்ளவர்கள் படித்த காலத்திலே இப்போதுள்ள அளவுத் தமிழ்ப்பாடங்கள் இல்லை யாதலினுலும் ஆங்கிலத்திலேயே பலகாலம் எழுதி அவர்கள் பழகியவர்கள் ஆதலினுலும் கீழுள்ளோர் எழுதும் வரைவு குறிப் புகளில் இருககக்கூடிய இலககணக் குற்றங்களை அவர்களில் பெரும்பாலோர் கண்டுவிடமுடியும் என்று சொல்வதற்கில்லை. நடுவே உள்ள அவர்கள் குறைகளைத் தெரிந்து கொண்டாலும் அதனுல் கவலைகொள்ள வேண்டாம. துவக்கநிலையில் இருப்ப தால் தமிழில் காணும் இலக்கணத தவறுகளுக்காக மேல் அலுவலர்கள் ஏதும் இன்னும் சிலகாலம் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள். 1925இல் நான் அமைச்சகத்தில் அலுவல் ஆற்றியபோது நடந்த ஒரு நிகழ்ச்சி இப்போது நினைவுக்கு வருகிறது. ஆங்கிலத்தில் குறிப்பு எழுதியனுப்பினுர் ஓர் உதவிச் செயலர் (Asst Secretary). ஒன்ருக எழுதக்கூடியவர். செயலர் ஆங்கிலேயர். அப்போது பெரும்பாலான செயலர்கள் அயல் நாட்டவர்கள். அக்குறிப்பின்மீது "The Asst-Secretary has taken one full week for half a page of broken English" என்று செயலர் எழுதினுர். அங்ஙனம் இக்காலத்தில் தமிழ் வரைவு குறிப்புகளைப்பற்றி எவரும் எழுதிவிடுவார் என்று எண்ண வேண்டா. தமிழில் அத்துணை உயர்ந்த தரமான

மொழியை இன்று எதிர்பார்க்கவும் மாட்டார்கள். எனவே, இலக்கணப் பிழைகள் நேர்ந்து விடுமே என்று இன்று உண்மைத் தமிழ்ப்பற்றுடைய எவரும் தயங்கித், தமிழில் எழுதுவதில் பின்னடையத் தேவையில்லை.

### iii. பற்றின்மையால் பகருநர் சிலர்

தமிழில் எழுதுவதற்கு அருவருப்புக் கொள்ளும் சிலர் தமிழ் இலக்கணத்தின்மீது பழியைச் சுமத்துவதைக் காண்கிறோம். தமிழ் இலக்கண விதிகள் மிகவும் சிக்கலானவை யென்றும் அதுவே தாம் தமிழில் எழுதுவதற்குப் பெருந்தடையாக இருக்கின்றது என்றும் கூறுவர். இலக்கணம் என்பது என்னவென்று அறிந்திராதவர்களே இவர்களில் பெரும்பாலோர் ஆவர். இவர்கள் தமிழ் தெரிந்தவர்களாயிருப்பினும் தாம் வீட்டில் பேசும் மொழி தமிழல்லாத வேறு மொழியாக இருக்கும். அதனால் தமிழ்மீது அவர்கள் பற்றுக்கொள்ளாமல இருக்கலாம். இது சரியான மனப்போக்கு அன்று. தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத சிலர், தமிழில் பெரும்பற்றும் ஆர்வமும் பூண்டிருக்கின்றார்கள். தமிழைத் தமிழாகவே பேசவேண்டும் எழுதவேண்டும் என்னும் உறுதியையும் அவர்கள் கொண்டிருக்கின்றார்கள். இதுவே இருக்கவேண்டிய சரியான மனப்பான்மை. தமிழகத்தில் வாழும் நாம் அனைவரும்—பிறமொழியை வீட்டில் பேசும் வகையினர் உள்பட—தமிழர்கள் என்னும் உணர்வு படைத்தவர்களாக இருப்பதே பொருத்தம். தமிழ் தமிழகத்திலுள்ள நம் அனைவரின் தாய்மொழி என்னும் எண்ணமும் வளரவிட வேண்டும். இங்குள்ள எல்லோரின் அன்றாட வாழ்வுக்கு இன்றியமையாது தேவைப்படுவது தமிழே யாதலின் அவரவர் தாயார் அவரவர்க்கு இன்றியமையாதவராக இருப்பதுபோல இப்பகுதியிலுள்ளவர்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத மொழியாக இருக்கும் தமிழ் அனைவர்க்கும் தாய் மொழியாகும் என்பதற்கு என்ன தடையிருக்கக் கூடும்? உண்மையில் நம் எல்லோருக்கும் அவரவர் மொழியோடு தமிழும் தாய்மொழியாகும். அப்படியே ஆந்திரத்திலோ பிறமாநிலத்திலோ வாழும் தமிழர்களுக்கு அந்தந்த மாநிலத்து மொழியும் தாய்மொழியாகும். அவ்வம் மாநில மொழியிலும் அவர்கள் பற்றோடு இருத்தல் வேண்டும்.

### iv. சந்திப்பிழை சந்தியில் விடுமா ?

தமிழில் எழுதும்போது, சந்திப்பிழை சந்தியில் விட்டுவிடும் என்று சிலர் அஞ்சுகின்றனர். இந்த அச்சம் தமிழ் மொழியின்

இயற்கைக்கு மாறில்லாத பாங்கினை அறிந்து கொள்ளாததால் விளைவது எப்படி நாம் உச்சரிக்கிறோமோ, அப்படியே எழுது வதைத்தான் தமிழ் இலக்கணம் எடுத்தியம்புகிறது. ஆங்கிலத் தில் போல, எழுதுவது ஒரு வகையாகவும், உச்சரிப்பது வேறு வகையாகவும் இருக்கும் பொருத்தமற்ற மரபு தமிழில் இல்லை. B-U-T ஐ 'பட்' என்போம். ஆனால் P-U-T ஐ 'புட்' என்போம். தமிழில் 'பயன்' 'நயன்' போன்றன ஒரே வகையான உச்சரிப் புடையன என்பதையறிவோம். 'ப-ய-ன்' என்பதைப் 'பயன்' என்றும், 'ந-ய-ன்' என்பதை 'நயுன்' என்றும் சொல்வதில்லை.

"அவனை + கண்டேன்" என்னுஞ் சொற்களைச் சேர்த்து உச்சரிக்கும்போது 'அவனைக் கண்டேன்' என்றே சொல்வோம். 'அவனை கண்டேன்' என்று இடைவிட்டு மொழிவதில்லை. இந்த இயற்கை நிகழ்ச்சியை, இலக்கணத்தில், 'இரண்டாம் வேற்றுமை உருபாகிய 'ஐ' ஒரு சொல்லின் ஈற்றில் வந்து, அடுத்து வரும் மொழிக்கு முதலாக ஒரு வல்லெழுத்து (கசதப) வருமானால் இடையில் அவ் வல்லெழுத்து மிகும்', என்று எழுதி வைத்திருககின்றனர். அப்படியே, 'அவனுக்கு - கொடுத்தேன்' என்னும் இரு சொற்கள் இணையும்போது 'அவனுக்குக் கொடுத்தேன்' என்போம். உச்சரிகும்போது இயற்கையாக இடையில் 'க்' வருகின்றது. 'க்' ஐ விட்டு உச்சரிப்பதில்லை, இந்த உண்மையை 'நான்காம் வேற்றுமை உருபான 'கு' ஒரு சொல்லுக்கு இறுதியில் வரும்போது, வருமொழி முதலிலுள்ள வல்லெழுதது மிகும்' என்று இலக்கண விதி எழுதியிருக்கின்றனர். இப்படியே பிறவும். இயற்கைக்கு மாறாக நாம் உச்சரிப்பதில்லை. ஆனால், எழுதும் போது மட்டும் இயற்கை ஓசைக்கு ஒத்தபடி வல்லெழுதது மிகாமல் எழுதிவிடுகிறோம். இலக்கணம் படித்துவிட்டுத்தான் வல்லெழுத்தை இடையில் இட்டு எழுதவேண்டும் என்னும் அறிவை நாம் பெற வேண்டியதில்லை. நாம் எப்படி ஒலிக் கின்றோமோ, அதையே விதியாக்கி, இலக்கணமாக எழுதி வைத்திருக்கின்றனர் என்பதை யுணரவேண்டும். சந்தி இலக்கணம் நமக்கு இடர்விளைப்பதன்று. நாம் பேசுவதுதான் இலக்கணம் என்பதே உண்மை.

'அவனை - உயர்த்தி' என்னும் சொற்களைச் சேர்த்து ஒலிக்கும்போது, 'அவனையுயர்த்தி' என்போம். வருமொழி முதலிலுள்ள 'உ' என்னும் எழுத்து 'யு' என்று ஆகிவிட்டிருக் கிறது. இதுவும் இயல்பாக நிகழ்வதே. இரு சொற்களையும் இணைத்து உச்சரிக்கும்போது 'அவனை' என்னும் சொல்லைத் தனியேயும், 'உயர்த்தி' என்னும் சொல்லைத் தனியேயும்

இடைவிட்டு, 'அவனை - உயர்த்தி' என்று மொழிவதில்லை. இயற்கையாக, 'அவனையுயர்த்தி' என்றே ஒலிக்கிறோம். நிலை மொழி இறுதியில் ஓர் உயிர்எழுத்து வந்து, வருமொழி முதலிலும் ஓர் உயிர் எழுத்து வரும்போது இரண்டு உயிர் எழுத்தும் இயைவதால் வருமொழி முதலில் வரும் உயிர், 'ய' அல்லது 'வ' எழுத்தாக மாறிவரும். 'அது அரிது' என்னும் சொற்களுக்கு இடையில் 'வ' தோன்றி 'அதுவரிது' என்றாகும். இவற்றை நாமாக வலிந்து செய்வதன்று. இயல்பாக நிகழ்வது. இதனை இலக்கணப்படுத்தியிருக்கின்றனர் அவ்வளவே.

இவ்வாறாக, தமிழில் எழுதும்போது ஏற்படும் சந்தி மாற்றங்கள் யாவும் இயல்பாக நாம் உச்சரிப்பதையொட்டியே ஏற்படுகின்றன என்பதை யுணர்ந்துகொள்ள வேண்டும். எழுதும்போது அவ் வுச்சரிப்புக்கு ஏற்றபடி எழுத்துக்களைப் பெய்து எழுத வேண்டும். இவ்வாறு செய்தால் சந்திப் பிழை நேராது. சந்திமுறை நம்மைச் சந்தியில் விடுவதற்கும் இடமில்லை.

V. 'ர'கர, 'ற'கரம் இரண்டானவா ?

அரசின் தலைமைச் செயலகமான, அமைச்சகத்தில், அங்கு பணிபுரியும் அலுவலர்களுக்கு ஆட்சிமொழிப் பயிற்சி வகுப்பு நடத்தும்போது, 'இடையினம் வந்தால் மிகும்', 'வல்லினம் வந்தால் மிகாது' என்று இலக்கணம் கூறுவது இயற்கை முறையாகுமா முரட்டுத்தனமான விதியாகாதா ?' என்னும் ஒரு கேள்வி எழுந்தது.

தமிழில் எத்தனை 'Ra' இருக்கிறது என்று வினவினேன். இரண்டு 'Ra' என்று பல குரல்கள் விடை ஒலித்தன. தனித் தனியாகச் சிலரைச் சுட்டி 'அப்படியா ?' என்று கேட்டேன்; ஆம என்று விடை வந்தது. இடையின 'Ra' 'வல்லின' 'Ra' என்றனர். சிலர், சின்ன 'Ra', பெரிய 'Ra' என்றனர். வேறுசிலர் வண்டி 'Ra', கால் 'Ra' என்றும் கூறுவர் என்றேன். ஒரு சிரிப்பு அலை யோடியது. கற்கண்டு 'Ra', சர்க்கரை 'Ra' என்றும் ஓர் ஆசிரியர் கூறுவார் என்றேன். மீண்டும் ஒரு சிரிப்பு அலை சுருள்புரிந்தது.

பிறகு, தமிழில் ஒரு 'Ra' தான் இருக்கிறது என்றேன். 'மற்றொன்று?' என்னும் கேள்வி எழுவதற்கு முன்பே, அது 'Rta' என்றேன். இதைப் பயிலுநரே உணர்வதற்காக, 'மற்ற' என்று கரும்பலகையில் எழுதி, இதை உச்சரிக்கச் சொல்வேன்

'Marta' என்பர். முதலில் உள்ள எழுத்தைச் சுட்டிக்காட்டி அதை 'ஒலிக்க' என்பேன். 'ம' என்பர், இரண்டாவது எழுத்து 'Ir' என்பர். மூன்ருவது எழுத்து 'Ra' நீங்கள் ஒலிக்கும் வண்ணமே மூன்று எழுத்தையும் சேர்த்து உச்சரித்தால், 'Marta' என்றுதானே ஆகும். ஆனல் அச் சொல்லை 'Marta' என்றுதானே சொன்னீர்கள். அப்போது இரண்டாம் எழுத்து 'Irt' அன்ருே? மூன்ரும் எழுத்து 'Rta' அன்ருே? பின்னை ஏன் முறையே 'Ir' என்றும் 'Ra' என்றும் சொல்கிறீர்கள் என்று கேட்டபோது, விழிப்பு உண்டாயிற்று. கண்களின் விழிப்பு, அறிவின் விழிப்பு.

தமிழில், ஒரு 'Ra' தான் உண்டு. அதையே இடையின 'ர'கரம் என்போம். மற்ருென்று 'Rta', அதனை 'வல்லின றகரம்' என்போம். ஒன்று 'Ra' மற்ருென்று 'Rta' நாக்கின் நுனியைப் பற்களின் மேல் வரிசையின் அடியில் வைத்து உறசிச் சொல்வதே 'Rta' (ற) என்று இலக்கண நூல் களில் குறிக்கப்பெற்றிருக்கிறது என்றதும் ஒவ்வொருவரின் நாக்கின் நுனியும் அங்ஙனம் உறசிப் பார்க்க முற்பட்டது.

'கற், கண்டு' என்னும் சொல்லில் வரும் 'ற்' 'Irt' ஓசை யுடையது என்பதைப் பயிலுநர் யாவரும் ஒப்புக் கொண்டனர். 'Irt' என்னும் ஓசைக்குப் பின் 'க' வருவதால் 'Irt க' என்று உச்சரிப்பது இயல்பேயல்லாமல், 'Irtக்க' என்று உச்சரிப்பது இயல்பாகாது. அங்ஙனம் உச்சரிக்கவும் முடியாது. எனவே தான் வல்லின ற வுக்குப் பின் வல்லெழுத்து வந்தால் மிகுவ தில்லை.

'சர்க்கரை'யில் 'ர்'க்குப் பின், 'க்' வரவேண்டியிருக்கிறது. அங்ஙனம் வரவில்லையென்ருல் 'சர் கரை' என்ருகும். எனவே, இடையின 'ர'கரத்திற்கு பின் வல்லினம் மிகுவது இயல்பா கிறது.

இவ் விளக்கம் தந்தபின், வல்லினத்துக்குப் பின் மிகாது, இடையினத்துக்குப் பின் மிகவேண்டும் என்னும் விதி எவ்வளவு இயல்பானது என்பதை எல்லோரும் உணர்ந்து கொண்டனர். இந்த இயல்பான நிகழ்ச்சியையே இலக்கணத்தில் பொறித்து வைத்திருக்கின்றனர் என்பதைப் புரிந்து கொண்டனர்.

'இரப்பு', 'இறப்பு' என்னும் சொற்களில் முறையே வரும் இடையின வல்லின ரகர றகரங்கள் இரண்டையும் 'Ra' என்றே உச்சரித்து விடுவதால், எழுதும்போது ஒன்றுக்கொன்று மாற்றி எழுதிவிட நேர்கிறது. முதல் சொல் 'Irappu' இரண்டாம்

சொல் 'Iratpu' ஒலிக்க வேண்டிய இயல்பான முறையில் ஒலிக்காமையால் ஒலிக்கப்பழகாமையால் - இவ்வகையான சொற்களில் வல்லின இடையினப் பிழைகள் ஏற்பட நேர்கிறது. இது நம் நாக்கின் குறையேயன்றி மொழியின் குறையோ, அல்லது அதன் இயல்பான போக்குகளை முறைப்படுத்தியுள்ள விதிகள் அடங்கிய இலக்கணம் தரும் இடரோ ஆகாது.

### vi. ந, ன, ண க்கள் ஏனோ மூன்று

தமிழில் 'Na' என்னும் மூல ஓசைக்கு ந, ன, ண என்று மூன்று எழுத்துக்கள் இருப்பது குழப்பம் விளைக்கவில்லையா என்று ஒரு கேள்வி கேட்கப்பெற்றது. 'ந' வைத் தந்நகரம் என்றும் 'ன' வை 'றன்னகரம்' என்றும், 'ண'வை டண்ணகரம். என்றும் சொல்வர். 'தந' 'றன', 'டண' என்று தமிழ் நெடுங்கணக்கில் (Alphabet) வருவதைக் காண்கிறோம். இவ் இணையெழுத்துக்கள் ஒரே இடத்தில் பிறப்பன. எனவே அவை இன எழுத்துக்கள் முதலில் வரும் த, ற. ட என்னும் வல்லெழுத்துக்களைச் சார்ந்து வருவனவே. ந, ன, ண என்னும் மெல்லெழுத்துக்கள். வல்லெழுத்தை முன் வைத்தே 'தந்நகரம்', 'றன்னகரம்', 'டண்ணகரம்' என்கிறோம்.

'எந்த' என்னும் சொல்லை 'என்த' என்று எழுதினால் என்ன என்று ஒருவர் கேட்டார். 'ன்' எழுத்தும், 'த' எழுத்தும் நம் வாயில் வெவ்வேறு இடங்களில் பிறக்கின்றன. 'ன்' ஐ இயல்பானபடி உச்சரித்துவிட்டு, 'த' வை எளிதாக உச்சரிக்க முடியாது. உச்சரிப்பு இயல்பாகவும் எளிதாகவும், இனிமையாகவும் இருக்கும்பொருட்டே 'த'வுக்கு முன்னே 'ந்' உச்சரிக்க வேண்டும். அப்படியே மற்ற இணைகளுக்கும் 'என்று' என்பதை 'எந்து' என எழுதுவது தவறு என்பது இந்த இயல்பான உச்சரிப்பு முறையைப் பொறுத்தே யாகும். 'கண்டு' என்பதைக் 'கன்டு' என்றோ, 'கந்டு' என்றோ எழுதுவது, நாம் அச்சொல்லை ஒலிக்கும் இயல்பான முறைக்கு மாறாக இருக்கிறது. எனவே, அப்படி எழுதுவது தவறு என்பர்.

ஆங்கிலத்தில் - வடமொழியில் கூட - இவ்வேறுபாடு இல்லை. 'கந்தன்', 'கன்னம்'; 'கிண்ணம்' இச்சொற்களில் வரும் 'ந்', 'ன்', 'ண்' என்னும் எழுத்துக்களுக்கு 'N' என்னும் ஒரே ஆங்கில எழுத்தைப் பயன்படுத்தி, 'Kanthan', 'Kannan,' 'Kinnam' என்று அம்மொழியில் எழுதுவோம். அன்னை, அண்ணை அணை. என்னும் மூன்று தமிழ்ச் சொற்களையும் ஆங்கிலத்தில் எழுதும்போது 'Anna' என்னும் ஒரு வகையில்தான்

வரையமுடியும். எனவே, தமிழில் ந, ன, ண - க்கள் பயனுள்ளவையாக அமைந்துள்ளன என்பதை யுணரவேண்டும்.

## vii. ஒருமை பன்மை அரியவாகா?

அவன் வந்தான், அவள் வந்தாள், அவர் வந்தார், அது வந்தது, அவை வந்தன, அவன் அல்லன், அவள் அல்லள், அவர் அல்லர், அது அன்று, அவை அல்ல, இவ்வாருக பாலையும் உணர்த்தி ஒருமை பன்மைச் சொற்கள் தமிழில் அமைவதைப் பார்க்கிறோம். இதில் தவறு நேர்வதற்கில்லை. பள்ளி திறந்தது, பள்ளிகள் திறந்தன என்று எழுதவும் தெரியாமல் ஒன்றுக்கு ஒன்றை மாற்றி எழுதுபவர்கள் தமிழில் சிறிதும் சிந்தனை யில்லாதவர்களே யாவர்.

நேரக்கூடிய ஒருமை பன்மை பிழைகளுக்கு சில காட்டுகள் காண்க:

| பிழை | திருத்தம் |
|---|---|
| தன் கையைத் தூக்கினர் | —தம் கையைத் தூக்கினர்<br>தன் கையைத் தூக்கினன் |
| தம் தலையைத் தாழ்த்தினன் | —தன் தலையைத் தாழ்த்தினன்<br>தம் தலையைத் தாழ்த்தினர் |
| ஒவ்வொரு நாடுகளும் கலந்து கொண்டன | —ஒவ்வொரு நாடும் கலந்து கொண்டது |
| குழந்தைகள் பிறக்காது | —குழந்தை பிறக்காது<br>குழந்தைகள் பிறக்கா |
| எல்லா வேலைகளும் ஏற்றதல்ல | —எல்லா வேலைகளும் ஏற்றனவல்ல<br>எல்லா வேலையும் ஏற்றதல்ல |
| தொல்லைகள் இராது | —தொல்லைகள் இரா<br>தொல்லை இராது |
| தானே வந்தார் | —தாமே வந்தார்<br>தானே வந்தான்<br>தானே வந்தாள்<br>தானே வந்தது |
| தலைவர் தன் பெயரைச் சொன்னர் | —தலைவர் தம் பெயரைச் சொன்னர்<br>தலைவன் தன் பெயரைச் சொன்னன் |
| ஆசிரியை வந்தார் | —ஆசிரியை வந்தாள்<br>ஆசிரியர் வந்தார். |

சிறிது விழிப்பாக இருந்துவிட்டால் ஒருமை பன்மை பிழைகள் நேர்வது அரிது.

## viii. மொழி முதல் வாரா 'ர' 'ல' எதனால்?

'இராமர்' என்று எழுத வேண்டும்? 'ராமர்' என்று எழுதினால் போதாதா? 'இலட்சுமணன்' என வரைவது ஏன், 'லட்சுமணன்' என வரைந்தால் சாலுமே? என்று கேட்கின்றனர். 'ராமர்' 'லட்சுமணர்' என்று பலர் எழுதவும் செய்கின்றனர். தமிழறிவு படைத்தவர்களும் இங்ஙனம் வரைவது வியப்பாக இருக்கிறது. புலவர் பட்டம் பெற்றவர்களில் சிலரும், இவ்வாறு எழுதுவது மேலும் வியப்புத் தருகிறது. இலக்கணத்தில், ர, ல, எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வாரா என்பதைச் சுட்டிக்காட்டி அவர்களைக் கேட்டால் இபபோதைக்கு அந்த இலக்கணம் தேவையில்லையென்று கூசாமல் கூறுவர்.

இலக்கணத்தில் எழுதி வைத்திருப்பதால் அதனைப் பின்பற்ற வேண்டும் என்பது சரியன்று. நாம் பேசும்போது எப்படி உச்சரிக்கிறோமோ அதையே இலக்கணத்தில் குறித்து வைத்திருக்கின்றனர் என்பதே சரி. 'அ', 'இ' எழுத்துகளில் ஒன்றை முதலில் சேர்க்காமல். 'ரங்கன்', ராமன்' என்னும் சொற்களை எவ்வகை இடருமில்லாமல் எளிதாக உச்சரிக்க முடிகிறதே, அப்படியிருக்க இலக்கணத்தில் ஏன், ர, ல மொழிக்கு முதலில் வாரா என்று எழுதி வைத்திருக்க வேண்டும் என்னும் கேள்வி எழும். இதற்கு விடை கண்டுவிட்டால், ர, ல - வில் தொடங்கும் சொற்களுக்கு முன் அ, இ, எழுத்துகளில் ஒன்றை ஏன் இடவேண்டும் என்பதற்கான ஏதுவை இனிது அறிந்து கொள்ளலாம்.

குழந்தைகள் பேசத் தொடங்கும் பருவத்திலே 'ராஜா', 'ரசம்' 'லட்சுமி' என்பன போன்ற சொற்களின் முதல் எழுத்துக்களை உச்சரிப்பதில்லை. அவற்றை முறையே ஆசா, அசம், அச்சுமி என்றே சொல்லும். குழந்தை வாயில் ர, ல உச்சரிக்க முடியாதிருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

தமிழ்மொழி மனித இனம் குழந்தைப் பருவத்தில் இருந்த போது உண்டான மொழி. குழந்தையின் வாயில் ர, ல நுழையாதது போலவே, குழந்தைப் பருவத்திலிருந்த ஆதி மனிதன் வாயிலும் ர, ல நுழைந்திராது. கால வளர்ச்சியில் ர, ல வைச் சொல்லுக்கு முதலில் உள்ள எழுத்துகள் தமிழ் மொழியில் சேரத்தொடங்கியபோது அச் சொற்களின் முதலில் இருக்கும் ர, ல எழுத்துகளின் நயமின்மையைச் சிறிது குறித்து

நயமாக உச்சரிப்பதற்கு வாய்ப்பாகுமாறு அச் சொற்களின் முதலில் அ, இ ஓசைகளில் ஒன்று சேர்ந்தது. என்ருலும் அ, இ க்கு உரிய ஒரு மாத்திரை இச் சொற்களுக்கு முதலில் இவ் வெழுத்துக்கள் வரும்போது அவற்றிற்கு இல்லை. அரைக்கால் மாத்திரையோ, அ, இ-வை உச்சரித்துக் கொண்டு அடுத்து வரும் ர, ல வை உச்சரித்து வந்தனர். இயல்பாக உச்சரிக்கும் போது முதலில் நிகழ்ந்த இச் சிற்ருேசையைக் குறிப்பதற்கு ர, ல வில் தொடங்கும் எழுத்துகளுக்கு முன்னர் அ, இ எழுத்துக்களை இட்டு எழுதலாயினர். இதை இலக்கணத்தில் எழுதி வைத்தனர். அக் காலத்தில் அது சரியாக இருந்திருக்கும். ஆனுல் அ, இ இல்லாமலேயே ர, ல வில் தொடங்கும் சொற்களை இக் காலத்தில் இன்னலின்றி இசைக்க இயலும்போது அ, இ-க்கு என்ன வேலை என்று கேட்கலாம் அல்லவா ?

தமிழ் மொழி மிகப் பழமையானது. மனிதன் பேசத் தொடங்கிய ஆதிநாளில் அவன் பேசிய மொழி என்பதற்குத் தலைசிறந்ததொரு சான்ருக இவ் விலக்கண மரபு இயங்கி வருகிறது. எனவே, இம் மரபினை ஏன் அழித்துவிட வேண்டும். தமிழின் பழைமையைப் போற்றுவதற்கு இம் மரபும் துணையாகுமே? மற்ற மொழிகளுக்கு இல்லாத இச் சிறப்பைப் பேணுவதால் குறையேதுமில்லையே.

நான் சிறு வகுப்புகளில் மாணவனுக இருந்தபோது ஒரு நிகழ்ச்சி நடந்தது. நான் இருந்த வீட்டிற்கு எதிர்வீட்டிலே ஒரு மூன்று வயதுப் பையன் இருந்தான். அவனை நான் கண்டிப்பதுண்டு. தவறு செய்தால் அவனை என்னிடம் கொண்டு வருவர். அதனுல், அவனுக்கு என்மீது உள்ளூரக் கசப்பும் வெறுப்பும் உண்டாயின. ஒருநாள் நான் என் வீட்டின் தெருப்புறத்தில் நண்பருடன் உரையாடிக் கொண்டிருந்தபோது என்னை ஏசவேண்டும் என்ற நோக்கத்துடன் அச் சிறுவன், அவன் வீட்டு வாயிலிலிருந்து தலையை வெளியே நீட்டி, 'ஆமிங்கம், ஊமிங்கம்' என்று கத்தினுன். என் கவனம் ஈர்க்கப் பெறறதும் உள்ளே ஓடிவிட்டான். என் பெயர் ராமலிங்கம். இதில் ராம ஒரு சொல், லிங்கம் இன்னெரு சொல்.

ராம - ர் + ஆ + ம

லிங்கம் - ல் + இ + ங்கம்

இச் சொற்களில் உள்ள 'ரா' என்னும் எழுத்தில் உள்ள 'ர்' - ம், 'லி' என்னும் எழுத்தில் உள்ள 'ல்'-ம்

அவனால் உச்சரிக்க முடியவில்லை. இரண்டு (ர், ல்) மெய் எழுத்துக்களையும் விட்டுவிட்டு மற்ற எழுத்துகளை ஒன்று கூட்டியே அவன், 'ஆமஇங்கம்=ஆமிங்கம் என்று உச்சரித் திருக்கிறான். அதற்கு இணைஇசையாக ஊமிங்கம் என்னும் சொல்லைப் புனைந்து அமைத்துக் கொண்டான்.

தமிழ்மொழியின் மிகுபழந் தொன்மையைத் தெள்ளிதின் அறிவிக்கும் இம் மரபைப் பின்பற்றுவது, தமிழ் மொழியைப் போற்றும் எவரும் பற்றோடு செயற்பால தொன்றாகும்.

## ix. இயற்கையானவையே இலக்கண விதிகள்

தமிழ் இலக்கணத்தைக் கரடுமுரடாக எவரெவரோ எழுதி வைத்துவிட்டு அதன்படி தமிழ்மொழியைப் பேசவும் எழுதவும் வேண்டும் என்று கட்டளையிடவில்லை. நாம் எப்படிப் பேசு கிறோமோ அதையே இலக்கணமாக எழுதி வைத்துவிட்டிருக் கின்றனர் அறிஞர். இயற்கைக்கு மாறாக உச்சரிக்கவோ, எழுதவோ வழி வகுப்பதன்று இலக்கணம்.

ஓர் ஒரு என்னும் இரண்டு சொற்களை எங்கெங்கே பயன் படுத்துவது என்று குறித்துள்ள இலக்கணத்தைக் காண்போம். வருமொழிக்கு முன்னே உயிர் எழுத்து இருக்குமானால் ஓர் பயன் படுத்துவது இயற்கைக்குப் பொருத்தமாகும். ஓர் அணில், ஓர் ஆடு, ஓர் இலை, ஓர் ஈ, ஓர் உடை, ஓர் ஊர், ஓர் எருது, ஓர் ஏணி, ஓர் ஐயம், ஓர் ஒலி, ஓர் ஓசை, ஓர் ஔவை இச் சொற் றொடர் ஒவ்வொன்றையும் சேர்த்து ஒலிக்கும்போது, ஓரணில், ஓராடு, ஓரிலை, ஓரீ என்று இப்படி ஆகும். பிற எழுத்துக்கள் வருமாயின் 'ஒரு' என்னும் சொல்லைப் பயன்படுத்தலாம். ஒரு மாடு, ஒரு படம், ஒரு வீடு போல.

அது அரிது, இது இன்பம் என்று வரும் தொடர்களில் 'அது' என்பதில் 'ஃ' சேர்த்து அஃது அரிது, இஃது இன்பம் என்று சொல்வது ஓசைநயம் நல்கும். சேர்த்து உச்சரிக்கும் போது அஃதரிது, இஃதின்பம் என்று ஒலிக்கலாம்.

இவ்வாறாக, இயற்கையாக மனிதன் பேசுவதையே, எல்லாப் பகுதியினருக்கும் எக்காலத்துக்கும் பயன்படும்படி ஒருபடித்தாக்கி அங்ஙனமே அனைவரும் பேசவும் எழுதவும் வேண்டும் என்பதற்கு வழிவகுத்ததே தமிழ் இலக்கணம். தமிழ் எழுதுவதற்கு அஃது இடரன்று.

# "கண்களி மயக்கக் காதலர்"

[புலவர் இரா. இளங்குமரன்]

இக் கட்டுரைத் தலைப்பைக் கண்டதும் "அக் காதலர் எவர்? என்னும் வினாவே எவர்க்கும் எழுதல் ஒருதலை. ஆனால் அவர், "அந்தமில் இன்பத்து அரசாள் வேந்த"ராகிய இளங்கோவடிகளின் இனிய நண்பரும், மணிமேகலை துறவை 'ஆறைங் காதை'யில் பாடியவரும் ஆகிய தண்டமிழ் ஆசான் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரே எனின் வியப்புத் தோன்றக்கூடும். உண்மையில் சாத்தனாரே 'கண்களி மயக்கக் காதலர்' என்பதை அடிகளாரே கூறிய பின்பு ஐயுறுதற்கு அணுத்துணையும் இடமில்லை.

கள்ளும் நறவும் முதலாயின உண்டார்க்கே உள்ளக் களிப் புண்டாம். ஆனால், காண்டற்கரிய காட்சிகளைக் கண்டவர்க்குக் 'கண்களி' யுண்டாம். மையலுற்றார்க்கே மயக்கம் உண்டாம்; எய்தப் பெறாத இன்பம் ஓரிடத்தில் எய்தியவர்க்கே காதல் உண்டாம் இம் மூன்றும் ஒருங்கெய்தப் பெற்றார்க்கே கண்களி மயக்கக் காதல் தோன்றும். அவ்வாறு தோன்றப் பெற்றாரே கண்களி மயக்கக் காதலர் ஆவர். சாத்தனார் அந நிலையை எப்பொழுது எவ்விடத்து எந்நிலையில் உற்றார்?

மலைவளங் காணச் சென்ற செங்குட்டுவனுடன் இருந்த மதுரைச் சாத்தனார், அவன் முன்னிலையிலேதான் கண்களி மயக்கக் காதல் கொண்டு திகழ்ந்தார்.

வஞ்சி முற்றம் நீங்கி, அஞ்சாமுழவின் அருவி ஆர்க்கும் மஞ்சுசூழ் சோலை மலைவளம் காணுதற்குக் கோப்பெருந் தேவியும், அவள் ஆயமும், தன் பரிவாரங்களும் புடைசூழ நெடுவேலான் குன்றம் நண்ணிய செங்குட்டுவன், நெடியோன் மார்பின் ஆரம் போல விளங்கிய பேரியாற்றின் இடுமணற் பரப்பின்மேல் இனிது தங்கினான். அப்பொழுது உடனிருந்த சாத்தனார் கண்களி மயக்கம் கொண்டார் என்றால் எதனால் என்னும் வினா எவர்க்கும் எழும்பும்.

கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பாம் மலைக்காட்சி சாத்தனாரைக் கண்களி மயக்கக் காதலில் ஆழ்த்தியதா? அரிமாவன்ன ஆற்றலும் தோற்றமும் அமைந்த செங்குட்டுவன் பொலிவுதான் கண்களி மயக்கக் காதலில் ஆழ்த்தியதா? அரசி யின் ஆயமும் அரசியல் சுற்றமும்தாம் அக் காதலில்

ஆழ்த்தினவா? வென்றிச் செவ்வேள் வேலன் பாணி முதலாகப் பக்கமெல்லாம் பரவியெழுந்த பல்வேறு ஒலி முழக்கங்கள் தாம் தண்டமிழ் ஆசானைக் கண்களி மயக்கக் காதலர் ஆக்கினவா? திறை சுமந்து நிற்கும் தெவ்வர் போல யானைவெண் கோடும் அகிலின் குப்பையும் முதலாக அளவற்ற அரும்பொருள்களைச் சேரவேந்தன் திருவடிகளில் படைத்து, ''ஏழ்பிறப் படியேம்; நின் கொற்றம் வாழ்க'' என்று வாழ்த்திய குன்றக் குறவர்தம் கூற்றும் செய்கையும் தோற்றமும் பிறவும் கூலவாணிகரைக் கண்களி மயக்கக் காதலர் ஆக்கினவா?

இவ்வனைத்தும் சாத்தரைக் களிப்பூட்டி இருக்கலாம். மயக்கமோ காதலோ ஊட்டியிருக்க மாட்டா. மலைநாட்டை முதன்முறையாக இப்பொழுதுதான் அவர் காண்கிறாரா? செங்குட்டுவன் சீர்மையை இப்பொழுதுதான் நேரிடையாக நோக்குகிறாரா? இளங்கோவடிகளின் கெழுதகை உழுவலன் பினர் சாத்தனார். ஆகலின் அவர்தம் இச் சேர நாட்டுச் செலவு முதன்முறையாக இருந்திருத்தற் கியலாது. ஆதலால் இக் காட்சிகள் சாத்தரைக் களிப்புறச் செய்தவை ஆகலாமே அன்றி, 'மயக்கக் காதல்' ஊட்டுபவையாக மாட்டா.

குன்றக் குறவர் செங்குட்டுவனை வணங்கி எழுந்து,

> *''கான வேங்கைக் கீழோர் காரிகை*
> *தான்முலை இழந்து தனித்துயர் எய்தி*
> *வானவர் போற்ற மன்னொடும் கூடி*
> *வானவர் போற்ற வானகம் பெற்றனள்''*

என்று தாம் நேரில் கண்ட நிகழ்ச்சியைக் கூறினர். இதனைச் சாத்தனாரும் கேட்டார்.

கொற்றவன் தவறிழைத்ததும், கோவலன் மாண்டதும், கண்ணகி வழக்குரைத்ததும், அதன் விளைவும் மதுரையில் கண்டு அறிந்தவர் சாத்தனார். கண்ணகியார் கோவலன் இவர் தம் முன்னைச் செய்தியைக் கேட்டும் அறிந்தவர் அவர். ஆனால் கண்ணகியாரின் பின்னைச் செய்தி இன்னதென அவர் அறியார். ஆகலின் கண்ணகியார் கணவனுடன் 'கட்புலம் காண விட்புலம் போய' செய்தியைக் குன்றக் குறவர் கூறக் கேட்ட அவர் கண்ணகியாரின் தெய்வ நிலையை எண்ணி எண்ணி மயக்கம் கொண்டார். காட்சியால் கண்களி கொண்ட அவர் கண்ணகியாரின் பழுதறு வரலாற்றை முழுதுற அறியும் வாய்ப்புக் கிட்டிய அளவில் கண்களி மயக்கத்தினர் ஆனார்.

கண்ணகியாரைப் பற்றிய செய்தியைக் குன்றக் குறவர் செங்குட்டுவனிடம் உரைத்த காலையில் அவரை,

"எந்நாட் டாள்கொல் யார்மகள் கொல்லோ
நின்னாட் டியாங்கண் டினைப்பினும் அறியேம்"

என்று கூறிய வாய்மொழியே சாத்தரைக் கண்களி மயக்கக் காதலர் ஆக்கிற்றும்.

சாத்தனர் மாப்பெரும் புலவர்; மணிமேகலை யாத்த தண்டமிழ் ஆசான். குன்றவர் கூறிய உரையில் நன்றுறத் தோய்ந்து நெஞ்சம் பறிகொடுத்தார். 'எந் நாட்டாள் கொல்' என்று குன்றவர் வினவிய வினா அவரை ஆட்கொண்டது. 'எந் நாட்டாள்?' என்பதில் ஒவ்வொரு நாடும் அடங்கத் தக்கதுதானே. சேரநாட்டுக்கு மட்டும் விலக்குண்டா? பருவரல் ஊட்டிய பாண்டி நாடும் சரி, பதியெழுவறியாப் பழங்குடி கெழீஇய பொதுவறு சிறப்பிற் புகார்ச் சோணாடும் சரி, செழுமலைச் சேரநாடும் சரி 'எந்நாடு' என்பதனுள் அடங்கியே தீரும். இவ் வெண்ணத்தில் இருந்து விடுபடு முன்னரே,

'நின்னாட் டியாங்கண் டினைப்பினும் அறியேம்'

என்னும் குன்றக் குறவர் உரை சாத்தனர் செவியினிக்கப் பாய்ந்தது.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுவார் - ஆற்றுவாரற்று அலமந்து திரிவார் - உறுப்புச் சிதைந்து உலமருவார் - ஒருதனி வந்து இரங்கி நிற்பார் - இச் சேர நாட்டினராக இருத்தற்கு இயலாது. செங்குட்டுவன் என்னும் செங்கோல் வேந்தன் நாட்டின் எல்லையுள் இத்தகைய அவலம் ஏற்பட்டிருக்க முடியாது" என்று அவர்கள் கருதுவதை உட்கொண்டு-குன்று வாழ் மக்களும் கோல்நிலை உணர்ந்து கூறும் நிலைமையில் செங்குட்டுவன் ஆட்சிச் சீர்மை உண்மையை உட்கொண்டு-சிறக்க எண்ணினர். நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து இன்புற்றார். "செங்குட்டுவன் செங்கோல் மாண்பு தான் என்னே! என்னே!" என இறும்பூதெய்தினர். கண்களிப்ப நோக்கி, மையல் மிக்கு, இன்னதெனை இயம்பவொண்ணு இன்பநிலை யுற்றார். அந் நிலையில் கண்களி மயக்கக் காதலராக விளங்கினர்.

சாத்தனர் உணர்வை உள்ளவாறு உணர்ந்தவர் இளங்கோ வடிகளார். ஆதலால்,

"மண்களி நெடுவேல் மன்னவற் கண்டு
கண்களி மயக்கக் காதலோ டிருந்த
தண்டமிழ் ஆசான் சாத்தன்"

என்றார்.

மன்னர் அவையிலும், கற்றறிந்தோர் மையத்திலும் வாழும் புலவரொருவர் தம் புரவலனை நோக்கிச்,

"சோறு படுக்கும் தீயொடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெறல் அறியார்நின் னிழல்வாழ் வோரே
திருவில் அல்லது கொலைவில் அறியார்
நாஞ்சில் அல்லது படையும் அறியார்" (புறம் 20)

என்று நயந்து பாராட்டுவதினும் ஆள்வோர் தொடர்பென்பது அறியாமல், அறிவறிந்த கல்வியும் பெறாமல், காடுமலைகளில் வாழும் எளிய மக்களும் அல்லற்பட்டு நிற்பாளைக் கண்டு,

'எந்நாட்டாள் கொல், இந்நாட் டியாங்கண் நினைப்பினும் அறியேம்' என்று வினவுமாறு ஒரு நாட்டின் ஆட்சி நடைபெறும் என்றால் அவ்வாட்சி அன்றோ உலகம் எடுத்துக் காட்டாகக் கொள்ளத்தக்க ஆட்சி. அவ் வாட்சியைக் கண்டு உலகம் கண்களி மயக்கம் கொள்ளும் காலம் வருமா? வாழ்க கண்களி மயக்கக் காதல்!

———

## சிலப்பதிகாரச் சிறப்பு

"சிலப்பதிகாரமானது ஒன்பான் சுவையும் ஒருங்கமைந்த சிறந்த காப்பியமாதலன்றி, தமிழக வரலாற்று நூல் எனவும், தமிழ்மொழி வரலாற்று நூல் எனவும், கவின் கலை நூல் எனவும் மதிக்கத்தக்க சிறப்புடையதாகவும் எல்லா வகையானும் தமிழுக்கே உரிமையுடையதாகவும், தமிழர் ஆண்மையை விளக்குவதாகவும் உள்ளது."

நாவலர் ந. மு வேங்கடசாமி நாட்டார்

# நீகிரோ-திராவிடப் பண்பாடுகள்

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான செனகல் நாட்டின் குடியரசுத் தலைவர் லியோபோல்ட் செடர் செங்கோர் மே 23, 24 நாள்களில் சென்னைக்கு வருகை தந்தார். முதல் நாள் திராவிட மொழியியல், இலக்கிய அறிஞர்களுடன் தமிழக ஆளுநர் மாளிகையில் கலந்துரையாடினார்.

அவ்வமயம் அடுத்த அனைத்துலகத் தமிழ் மாநாட்டை ஆப்பிரிக்க நாட்டில் நடத்துமாறு அழைப்பு விடுத்தார். திராவிட இயலில் அறிஞராக விளங்கும் அவர் ஆப்பிரிக்க நீகிரோ மொழிகளையும் திராவிட மொழிகளையும் ஒப்பிட்டு ஆராய்தல் வேண்டுமென்றார். ஆப்பிரிக்க-திராவிட மொழிகளின் வேர்ச் சொற்களில் கால் பங்கு இம்மொழிகளுக்குப் பொதுவாக உள்ளன என்பதைத் தாம் ஆய்ந்து கண்டுள்ளதாகக் கூறினார். ஆப்பிரிக்க-திராவிட தத்துவங்களுக்கும் தொடர்பு உள்ளதென அவர் குறிப்பிட்டார். 'இந்தியாவின் பெருமைக்கு வித்து திராவிடப் பண்பாடே' என்று அவர் உறுதியாகக் கூறினார்.

மறுநாள் சென்னை இராசாசி மண்டபத்தில் சென்னை அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் 'நெக்ரிடியூட்-திராவிடப் பண்பாடுகள்' பற்றி விரிவான ஆய்வுச் சொற்பொழிவை நிகழ்த்தினார்.

'நாம் கருநிறத் தோலுடையவர்கள் என்று வெட்கப்படுதல் கூடாது. அதைக்கொண்டு நாம் பெருமைப்பட வேண்டும். ஏனெனில் நாம்தாம் இவ்வுலகத்தில் மூத்தமக்கள். பண்பாட்டைத் தோற்றுவித்தவர்களே நாம்தாம்' என்று நீகிரோக்களையும் திராவிடர்களையும் இணைத்துப் பெருமையாகக் கூறினார் அவர்.

ஒரு மணி நேரத்திற்கு மேல் அவர் ஆற்றிய சொற்பொழிவில் இந்தியாவுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் இடையில் உள்ள ஒற்றுமைகளைப் பூவியல், மானிடவியல், வரலாறு, பண்பாடு, மொழியியல் முதலிய இயல்களின் அடிப்படையில் சிறப்பாக விளக்கினார். இந்தியாவும் கிழக்கு ஆப்பிரிக்காவும் ஒரு

காலத்தில் ஒன்றாக இணைந்திருந்தன என்று நிலநூல் வல்லார் குறிப்பிடுவதைச் சுட்டிக் காட்டினார். கிழக்காப்பிரிக்காவுக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையில் ஆழ்கடலில் புகுந்து பழைய எலும்புக் கூடுகள், பொருள்கள் ஏதும் கிடைக்கின்றனவா என்று தொல் பொருளாராய்ச்சியாளர்கள் ஆய்வு நிகழ்த்த வேண்டுமென்றார்.

கருப்பர் இனமான நீகிரோ, திராவிட இனங்களைப் பொதுவாக 'மெடிடரேனியன் இனம்' (மத்திய தரையினர்) என்று குறிப்பிடுவது தவறு. அது நிலவியல் பெயராக உள்ளது. அதைவிட மனித நிறத்தின் அடிப்படையில் கருப்பர் இனமென்று 'நீக்ராய் இனம்' என்று கூறுவதே பொருத்தமுடையது என்றார் அவர்.

திராவிட மொழிகளும் ஆப்பிரிக்க மொழிகளும் ஒரே இன மொழிகள் என்பதை முதன்முதல் எடுத்துக் கூறியவர் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த ஆல்பிரெடோ டிரோம்பெட்டி என்பவர். அதைத் தொடர்ந்து பலர் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். தற்பொழுது செனகல் நாட்டு மாணவர் ஒருவர் அந்நாட்டு மொழியான 'ஒலோப்' (Wolof) மொழிக்கும் திராவிட மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமைகளைப் பற்றி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி செய்து வருகிறார் என்று அவர் கூறினார். தம் நாட்டில் 1976இல் நடைபெறவிருக்கும் கருப்பர் மாநாட்டிற்குத் தமிழர்களும் வந்து கலந்துகொள்ள வேண்டுமென்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

---

## ஆராய்ச்சிக்குரியதோர் அரிய கருவி

*மொழி கருத்துக்களைக் கொண்டுசெலவும் ஊர்தி மட்டுமன்று; கருத்தாராய்ச்சித் தொழிலுக்கான ஓர் ஒப்பற்ற நல்ல கருவியுமாகும்.*

—சர் ஹம்ஃப்ரி டேவி.

# பெங்களூர் தமிழ்ச் சங்கத்தில்
# கலைஞர் அவர்களுக்கு வரவேற்பு



**27—5—74** இல் பெங்களூர் தமிழ்ச் சங்கத்தினர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கட்குச் சிறப்பானதோர் வரவேற்பளித்தனர். பெங்களூர் தமிழ்ச் சங்கத்திற்குக் கால்கோள் விழா நடைபெற்றது. அதுகாலை தமிழ்ச் சங்கத்தார் கலைஞருக்குத் 'தமிழ்க் காவலர்' என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்தனர். கலைஞரவர்கள் 50 ஆயிரம் வெண்பொற்காசுகளைத் தமிழ்ச் சங்கக் கட்டிடத்திற்கு நன்கொடையாக வழங்கப் போவதாக அறிவித்தார். தமிழ்ச் சங்கத்தார் கலைஞரவர்கட்கு அளித்த வாழ்த்துப்பாவின் ஒருபகுதி வருமாறு:

பேரறிஞர் அண்ணாவின் பேரணியிற் கால்கொண்டு
ஊரறிய உலகறிய ஓங்கிடும்நின் ஒளிவளர்க
பெங்களூர்த் தமிழ்ச்சங்கம் செய்ததவப் பயனால்
இங்குவந்து சங்கெழுப்பும் தங்கமே எங்கோவே
உன்னினிய முரசொலியால் உய்வுற்றார் பலகோடி
பொன்னாகப் போற்றுகிறோம் திராவிடத்தாய் பூரிக்கக்
கன்னடத் திருநாட்டில் தமிழ்காக்க வருகவெனச்
செந்நெல் விளைக்கும் திருநாடா! வேண்டுகிறோம்.
திரைப்படத்தில் நாடகத்தில் சிரித்துமுத்தாய்ச் சிந்துகின்ற
கருத்துயரும் ஏடுகளில் கலையொளிரும் கோயில்களில்
தமிழை நிலைநிறுத்தித் தமிழர்நலம் தாங்குவதால்
தமிழ்க்காவலர் என்ற சால்புடைய பட்டத்தை
எங்களது பேரன்பால் எழிலாகச் சூட்டுகிறோம்
திங்கள்போல் தண்மைசெயும் சீராளா ஏற்றருள்க
காவிரிபோல் செந்தமிழ்போல் காலமெலாம் வாழ்கவெனப்
பாவிரித்துப் பூவிரித்து நாவிரித்துப் பரவுகிறோம்.

—**பெங்களூர் தமிழ்ச் சங்கத்தார்.**

# செய்திகளும் குறிப்புகளும்

## திரு. க. ப. அறவாணனின் நன்னூல் பற்றிய ஆராய்ச்சி

சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துணைப் பேராசிரியர் திரு. க. ப. அறவாணன், எம். ஏ., பி. ஓ. எல். சென்னைப் பல்கலைக் கழகத்தின் வாயிலாக 'நன்னூலும் அதன் உரையாசிரியர்களும்' என்ற தலைப்பில் ஆராய்ச்சி நிகழ்த்தி 'எம். லிட்' பட்டம் பெற்றுள்ளார்.



தமிழ் இலக்கிய இலக்கணங்களில் நல்ல புலமையுடைய திரு அறவாணன் மிகச் சிறந்த முறையில் தம் ஆய்வினைச் செய்துள்ளார். ஆய்வு செய்வதில் ஆர்வம் மட்டுமின்றி ஆற்றலும் மிக்குடையார் என்பதை அவர்தம் கட்டுரைகளும் நூல்களும் சொற்பொழிவுகளுமே நன்கு காட்டும், இலக்கியம், இலக்கணம், வரலாறு, மொழியியல், தொல்பொருள் போன்ற பல துறைகளிலும் நாட்டமுடைய இவர் மேலும் பல பட்டங்களைப் பெற்றுச் சிறப்படைய வாழ்த்துகிறோம்.

## திராவிட மொழியறிஞர்களின் நான்காவது அனைத்திந்திய மாநாடு

சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் இயங்கிவரும் திராவிட மொழிச் சங்கத்தின் ஆதரவில் திராவிட மொழியறிஞர்களின் நான்காவது அனைத்திந்திய மாநாடு 1974 ஜூன் 6, 7 நாட்களில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. மாநாட்டைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தாமரைச் செல்வர் நெ. து சுந்தரவடிவேலு அவர்கள் தொடங்கி வைத்தார். திராவிடமொழி யாக்கத்திற்கும் குறிப்பாகத் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் பாடுபட்ட பேரறிஞர்களின் தொண்டை நினைவு கூர்ந்ததுடன் சென்னைப் பல்கலைக் கழகம் அத் துறைகளில் ஆற்றியுள்ள பணிகளையும் அவர் தம் தொடக்க உரையில் எடுத்துக் காட்டினார்.

தலைமையுரை நிகழ்த்திய அறிஞர் சூரைநாடு குஞ்சன் பிள்ளை, திராவிடமொழிகளின் சிறப்புக்களை உலகறியச் செய்ய வேண்டும் என்றார். 'மலையாளத்திற்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பைச் சுட்டிக் காட்டி இவ்விரு மொழிகளும் இணைபிரியாத மொழிகளென்றார். பல அறிஞர்கள் மலையாள மொழி வடமொழியிலிருந்தே தோன்றியது என்று கூறுவர். மலையாளம் வடமொழியிலிருந்து எண்ணற்ற சொற்களைக் கடனாப் பெற்றுள்ளதென்றாலும் அது திராவிடமொழிதான். அதில் ஐயமே இல்லை 'என்றார்.

மாநாட்டில் இந்தியா முழுவதிலிருந்தும் வந்த நூற்றுக்கு மேற்பட்ட அறிஞர்கள் கலந்துகொண்டனர். மாநாட்டை மிகச் சிறப்பான முறையில் நடத்திய தமிழ்ப் பேராசிரியர் டாக்டர். ந சஞ்சீவி அவர்கட்குத் திராவிடர்களின் நன்றி உரியதாகும்.

## கலைஞரின் பொன் விழா

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் 50 ஆவது அகவை நிறைந்து 51 ஆவது பிறந்த நாள் விழா 3-6-74 அன்று தமிழக மெங்கும் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப் பெற்றது. கண்ணொளி வழங்குந் திட்டம், பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம், இழுப்பு வண்டித் தொழிலாளருக்குச் 'சைக்கிள் ரிக்ஷா' வழங்குந் திட்டம் எனப் பல திட்டங்களைத் தமது பிறந்த நாளை முன்னிட்டு ஒவ்வோர் ஆண்டும் நிறைவேற்றி வரும் கலைஞரவர்கள் தமது 51 வது பிறந்த நாளை முன்னிட்டு உடல் உறுப்பு ஊனமுற்றோர்க்கு உதவும் திட்டம் ஒன்றினை வெளியிட்டுள்ளார் நாடெங்குமுள்ள அன்பர்களும் செல்வர்களும் இத் திட்டத்திற்கு உதவு முகத்தான் நன்கொடை வழங்கியுள்ளனர். அங்ஙனம் இப் பொன் விழாவினை யொட்டிச் சேர்ந்துள்ள தொகை 15 நூறுயிரம் வெண்பொற்காசுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

கலைஞரின் இந்தப் பொன் விழாவினை முன்னிட்டு 3-6-74 இல் கழக ஆட்சியாளர் அவர்களும் பொது மேலாளர் அவர்களும் புலவர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களும் கலைஞர் அவர்களின் இல்லம் சென்று அவருக்கு வாழ்த்து மடல் வழங்கிச் சிறப்பித்தனர்.

சை. சி. நூற்பதிப்புக் கழகத்தின் சார்பில் கலைஞரவர்கட்குக் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் வ. சுப்பையா தமது சொந்தக் காணிக்கையாக ரூபா 25க்குரிய காசோலை வழங்கி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

## டாக்டர் கலைஞர் அவர்களின் நூல்கள் வெளியீட்டு விழா

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் எழுதிய "ரோமாபுரிப் பாண்டியன்" "மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்று' என்னும் இரு நூல்களின் வெளியீட்டு விழா 9—6—74 மாலை சென்னைக் கலைவாணர் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்குத் தமிழ் ஞாயிறு புலவர் தேவநேயப் பாவாணர் அவர்கள் தலைமை தாங்கினார். அவர்தம் தலைமை உரையில் கலைஞருடைய எழுத்தாற்றலைப் பாராட்டியும், அவரது ஆட்சித்திறனைக் கரிகால் வளவனுடைய ஆட்சித் திறனோடு ஒப்பிட்டும் பேசினார்.

கலைஞரின் 'ரோமாபுரிப் பாண்டியன்' என்னும் நூலினை ஓய்வு பெற்ற முன்னாள் நடுவர் திரு. அனந்தநாராயணன் ஐ. ஏ. எஸ் அவர்கள் பாராட்டிச் சிறப்புரையாற்றி வெளியிட, கவிஞர் கண்ணதாசன் அவர்கள் பெற்றுக்கொண்டு கலைஞரைப் பாராட்டிப் பேசினார். 'மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்று' நூலினைப் புலவர் கோவிந்தன் அவர்கள் வெளியிட புலவர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் பெற்றுக் கொண்டார். திரு. நாரா. நாச்சியப்பன் வரவேற்புரை நிகழ்த்தினார். விழாவில் பங்கேற்றவர்கட்குக் கலைஞரின் செல்வி கனிமொழி மாலை யணிவிக்க, சாமி. பழனியப்பன் நன்றி நவில விழா இனிது முடிந்தது.

## தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 90-வது ஆண்டு நிறைவு விழா

சிவத்திரு க. சிவகுருநாத பிள்ளை அவர்களின் 100 ஆவது ஆண்டு நினைவு விழாவும், தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 90 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் முறையே, மேத் திங்கள் 25, 26 ஆம் நாள்களில் நடைபெற்றன. விழாவிற்குத் தவத்திரு சாந்தலிங்க இராம சாமியடிகள் தலைமை தாங்கினார். புலவர் பெருமக்களும் சித்தாந்தச் செல்வர்கள் சிலரும் பேருரையாற்றினர்.

## கேரளத்தில் மொழிப்பற்று வளருகிறது

இதுகாறும் கேரள அரசு அலுவலகங்களில் ஆங்கிலத்தில் மட்டுமே எழுதப்பட்டு வந்த அரசாங்க அலுவலகக் குறிப்புகளை இனி மலையாளத்திலும் எழுதலாம் என்று கேரள அரசு அண்மையில் ஓர் ஆணை பிறப்பித்துள்ளது. கேரளத்தில் தமக்குரிய முதல் தாய்மொழிப் பற்று வளர்கிறது என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டு.

## இனிப்பால் வளரும் சிந்தனை ஆற்றல்

பச்சைக் காய்கறிகளைக் குறைவாகவும் இனிப்புப் பண்டங்களை அதிகமாகவும் உட்கொண்டால் மனிதனின் சிந்தனை ஆற்றல் வளரும் என்று அண்மையில் அறிவியல் அறிஞர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

மாசேசூசெட்ஸ் என்னு மிடத்திலுள்ள நுண்கலை நிலையத்தைச் சேர்ந்த அறிவியல் ஆராய்ச்சியாளர் இவ்வுண்மையினை வெளியிட்டுள்ளனர். இனிப்புச் சத்து மூளையின் இயக்கத்தை விரைவு படுத்துகிறது என்றும் புரதச் சத்து அதனைத் தடுக்கிறது எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

## 1985 இல் உணவுப் பற்றுக்குறை ஏற்படும்

இப்போதுள்ள உலக மக்கள் தொகை வளர்ச்சி, உணவுப் பொருள் பற்றுக்குறை நிலை ஆகியன தொடர்ந்து நீடிக்குமானால், 1985 ஆம் ஆண்டில் உலக நாடுகளில் 34 நாடுகள் சத்துணவு பெற முடியாத நிலை ஏற்படும் என்று அண்மையில் ரோம் நகரில் கூடிய உணவுத்துறை அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். அடுத்து வரும் நவம்பர்த் திங்களில் ரோம் நகரில் உணவுப் பொருள் உற்பத்தி பற்றி ஆராய மாநாடு ஒன்று நடைபெற விருக்கிறது. அதற்கு முன்னர் இம்மாநாட்டு இயக்குநர்கள் ஓர் ஆரம்ப ஆய்வு அறிக்கையினை வெளியிட்டுள்ளனர். அவ்வறிக்கையின்படி உலக உணவுப் பொருள் உற்பத்தி 1985 ஆம் ஆண்டில் 10 விழுக்காடு குறையக் கூடும் எனக் கூறப்படுகிறது.

## திரு. சி சுப்பிரமணியம் அவர்கட்குச் செப்புப் பட்டய விருது

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட வீரர்களுக்குரிய செப்புப் பட்டய விருதினை 3-6-74 இல் கோவையில் நடுவணரசு தொழில் வளர்ச்சி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கட்கு மாவட்ட ஆட்சியாளர் ஜெ சிவகுமார் அளித்தார். விருது பெற்ற அமைச்சர் அவர்கட்கு நம் நல்வாழ்த்துக்கள்.

# மதிப்புரை

## பெரியபுராண ஆய்வுரை - முதல் தொகுதி - சுந்தரர்

[ஆசிரியர்: மறை திருநாவுக்கரசு. வெளியிட்டோர்: மறைமலையடிகள் பதிப்பகம், சி 237, சவகர் நகர், அகரம், பெரம்பூர், சென்னை-82. விலை ரூ. 6. 50.

கிடைக்குமிடம்: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட். 1/140 பிரகாசம் சாலை, சென்னை-1.]

பெரியபுராணம் வெறும் புராண மட்டுமன்று. அஃதொரு வரலாற்றுப் பெட்டகம். தொட்டனைத்தூறும் இலக்கியச் சுவையும், பத்திச் சுவையும் அளிக்கவல்ல அரிய நூல். இத்தகைய பெரியபுராணத்திற்கு முன்னரே பல அறிஞர் பெருமக்கள் ஆராய்ச்சிக் கருத்துக்களை வழங்கியுள்ளமை சைவ மெய்யன்பர்கள் அறிந்ததே. எனினும் ஆசிரியர் மறைமலையடிகளாரின் மைந்தர் மறை திருநாவுக்கரசு அவர்கள் உருவாக்கியுள்ள சுந்தரர் வரலாறு பற்றிய இவ்வாராய்ச்சி, ஆராய்ச்சியுலகில் புதியதொரு திருப்புமுனை என்றே சொல்ல வேண்டும். சுந்தரர் வரலாற்றினைச் சிறந்த வரலாற்றுக் கண்கொண்டு ஆராய்ந்து, வரலாற்றாசிரியர்களே கண்டு மகிழும் வண்ணம் பல அரிய - சுவையான உண்மைகளைக் கூறுகிறார் இந் நூலாசிரியர். தாம் கண்ட உண்மைகளைத் தக்க ஆதாரங்கள் காட்டி நிலைநிறுத்துகிறார்.

ஆசிரியரின் தமிழ்ப் புலமை, பெரியபுராணத்தில் இவர் கொண்டிருக்கும் ஈடுபாடு, சைவ சமயப் பற்று, பொதுநிலை நோக்கு இன்னபிற இவ்வாராய்ச்சி நூலின் வாயிலாய் நன்கு அறியக் கிடக்கின்றன.

இது பெரியபுராண ஆய்வுரையின் முதல் தொகுதியாகும். ஏனைய தொகுதிகள் விரைவில் வெளிவந்து புராண உலகிற்கும் வரலாற்று உலகிற்கும் புதிய பாலம் அமைக்கும் என எதிர்பார்க்கிறோம். ஆசிரியரின் முயற்சிகள் வெற்றிபெற இறைவன் அருள் புரிவானாக.

## கவிக்கடல்

[ஆசிரியர்: இ. சு. முத்துசாமி, எம்.ஏ., பி.டி., வெளியிட்டோர்: வான்மயில் பதிப்பகம். விலை: ரூ. 3. 00. கிடைக்குமிடம்: பாரி நிலையம், சென்னை-1.]

மாநிலக் கல்லூரித் துணைத் தமிழ்ப் பேராசிரியர் கவிஞர் இ. சு. முத்துசாமி அவர்கள் எழுதியுள்ள கவிதைகளின் தொகுப்பு நூலாகிய இந் நூல், கவிதை இலக்கியத்திற்குரிய நயங்கள் அனைத்தும் ஒருங்கு திரண்ட சுவைமிக்கதொரு நூலாக நூலின் பெயருக்கேற்ப நல்ல கவிக்கடலாகத் திகழ்கிறது. கவிஞர் கண்ணதாசன், டாக்டர் மெ. சுந்தரம், டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், கொண்டல் சு. மகாதேவன் ஆகியோர் இந்நூலுக்கு அளித்துள்ள பாராட்டுரைகளே 'கவிக் கடலின்' சிறப்பினை எடுத்துக் காட்டுவனவாகும். படித்துப் பாருங்கள்.

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்திற்காக
சென்னை-600001, 2-140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில்
திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

# கழகப் புதிய வெளியீடுகள்

**கல் எண்ணெயின் கதை (பெட்ரோலியம்)**

**—என் கே. வேலன், பி. ஏ.**

மண்ணிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் மக்கள் வாழ்க்கைக்கு எத்துணை இன்றியமையாதது என்பதை விளக்கு கிறது இந்நூல். கல் எண்ணெய் உற்பத்தி—அதனை எடுக்கும் முறை—எண்ணெய்த் தொழில்--பிளாஸ்டிக்—பெட்ரோலியம் ஆகியனவற்றால் விளையும் அற்புதங்கள் இன்னபிற செய்திகள் இனிய எளிய தமிழில் கூறும் அரிய நூல். ரூ. 3 75

**திருவாசகம்-நீத்தல் விண்ணப்பம் - உரை**

**—புலவர் ந ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.**

திருவாசகத்தின் ஒரு பகுதியாகிய நீத்தல் விண்ணப்பம் பத்திச் சுவை நிறைந்தது. பொருட் செறிவுடையது. இதற்குப் புலவர் முருகவேள் அவர்கள் அரிய பொழிப்புரையும் விளக்க வுரையும் எழுதியுள்ளார்கள். சைவ மெய்யன்பர்களும், புலவர் பட்டம் பெறுவோரும் படித்துச் சுவையும் பயனும் காண வேண்டிய நூலாகும். ரூ. 4 00

**VOICE OF VALLALAR** (in English)

By Rao Sahib S. R. V. Arasu, B.A.

வள்ளலார் இராமலிங்க அடிகள் சாதி வேறுபாடுகளற்ற சமநிலை சமுதாயத்தை அமைக்கவும், நாட்டு மக்களிடையே காணப்படும் வறுமை அறியாமை ஆகியவற்றை அகற்றவும் பாடுபட்டார். வள்ளலாரின் இவ் அரும்பணிகளை அவர்தம் திருவருட்பாப் பாடல்களினின்றே எடுத்துக்காட்டுகிறது இந்நூல். அனைத்துலகும் வள்ளலார் குரல் கேட்டு உய்யும் வண்ணம் இந்நூல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. அறிஞர் ராவ் சாகிப் நல் முருகேச முதலியார் அவர்களின் சீரிய முன்னுரையுடன் கூடிய அரிய நூல். 5 00

| | |
|---|---|
| **கிறக்கும் உச்சி (தமிழாக்கம்)**<br>—கு. பரமசிவன், எம்.ஏ. | 6 C0 |
| **காக்கைபாடினியம் (விளக்க உரையுடன்)**<br>—புலவர் இரா. இளங்குமரன் | 12 00 |
| திருவருட்பாப் புகழ்த்திரட்டு | 4 00 |
| பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்கள் | 4 00 |
| திருவாசகத் திருப்பாடல்கள் | 4 00 |
| தாயுமான அடிகள் திருப்பாடல்கள் | (அச்சில்) |

பதிவு எண் : M. 4899

# பிற பதிப்பாளரின் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| நாட்டுப்புற இலக்கியப் பார்வைகள் —திரு. க. ப. அறவாணன், M. A., M. Litt. (நாடோடிப் பாடல்கள், பழமொழிகள் வாய்மொழி இலக்கியம் ஆகியன பற்றிய ஆய்வுரை) | 6 | 00 |
| அவன் அவள் அது—க. ப. அறவாணன் | 3 | 00 |
| புதிய கோலங்கள்—தாயம்மாள் அறவாணன் | 4 | 00 |
| ஆராய்ச்சித் தமிழ் - ஒரு முன்னுரை | 1 | (C |

## வாழ்க்கை வரலாற்று நூல்கள்

| | | |
|---|---|---|
| எனது போராட்டம்—ம. பொ. சிவஞானம் | 25 | 00 |
| எனது (என்) நினைவுகள்—கோவை அய்யாமுத்து | 22 | 00 |
| வரலாறும் வக்கிரங்களும் - ரொமீலா தப்பார் | 3 | 00 |
| வள்ளலார் வாழ்வும் வாக்கும்—அ. லெ. நடராஜன் | 5 | 00 |
| நல்வாழ்வு—டாக்டர் மு. வரதராசன் | 1 | 50 |

## பல்வகை

| | | |
|---|---|---|
| ஒப்பந்தச் சட்டவியல் (Law of Contracts) —ர. ஆர். சனகன் | 7 | 55 |
| இலக்கண விளக்கம் - செய்யுளியல் | 16 | C0 |
| மொழியும் மொழியியலும்—சு. இராசாராம் | 6 | 00 |
| நிலா நானூறு— தொகுப்பாசிரியர்கள் கவிஞர் ஆற்றலரசு, புலவர் கல்லை ஆ துரை | 12 | 00 |
| டாக்டர் மு. வ. கலைக்களஞ்சியம்—இரா. மோகன் | 5 | 00 |
| புதிய ஜெர்மனியில்—நெ. து. சுந்தரவடிவேலு | 3 | 00 |
| ஒரு தமிழச்சியின் கதை—எஸ். எஸ். தென்னரசு | 3 | 00 |
| ரோமாபுரிப் பாண்டியன் —டாக்டர், கலைஞர் மு. கருணாநிதி | 25 | 00 |
| மேடையிலே வீசிய மெல்லியப் பூங்காற்று ,, | 6 | 00 |
| சௌந்தர்ய லஹரீ—பண்டித வித்துவான் மு. முத்து வேங்கடாசலமய்யர் | 1 | 25 |
| Early Literary Theories in Tamil —G. Sundaramurthy | 22 | 00 |
| Epic Poetry and the Modern mind —A. V. Subramania Ayer | 12 | 50 |

அப்பர் அச்சகம், சென்னை-600 001